# කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# PERFORMANCE REPORT
# 2025




ආනයන හා අපනයන පාලන දෙපාර්තමේන්තුව
இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
DEPARTMENT OF IMPORTS AND EXPORTS CONTROL

මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

# செயலாற்றுகை அறிக்கை - 2025

செலவினத் தலைப்பு - 296

## இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)த் திணைக்களம்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் செய்தி



இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களமானது 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்படும் திணைக்களமொன்றாகும். 202 ஆம் வருடத்திற்கான திணைக்களத்தின் இலக்குகளை அடைந்து கொண்டதன் மூலம் பெற்றுக் கொண்ட வெற்றியையும் உள்ளடக்கிய செயலாற்றுகை அறிக்கையை வெளியிடும் இச் சந்தர்ப்பத்தில் அதற்காக திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் என்ற வகையில் செய்தியொன்றை வழங்குவது மிகவும் மகிழ்ச்சியிலாகும்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்திற்கு இணங்கி இந் நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், பொது சுகாதாரம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்பவற்றைக் கருத்திற் கொண்டு நிலைபேறான அபிவிருத்தியடைந்த நாடொன்றிற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செயன்முறையை ஒழுங்குபடுத்தல் என்ற "செயற்பணி" உடாக திணைக்களத்தை வழிநடாத்துவதற்க 2025 ஆம் ஆண்டில் புதிய செயற்றிட்டங்கள் பல ஆரம்பிக்கப்பட்டன. விசேடமாக பல வருட காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த வாக இறக்குமதியை பொருளாதாரத்திற்கு பாரமில்லாது முகாமைத்துவம் மற்றும் ஒழுங்குபடுத்தி முறையாக திறப்பதற்குத் தேவையான சட்டரீதியான அமைப்பு 2025 இன் ஆரம்பத்திலேயே இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியொன்றினூடாக மேற்கொள்ளப்பட்டது.

அப் பணியைச் செயற்படுத்திய பின்னர் 10 அதிவிசே வர்த்தமானி அறிவித்தல்களை சந்தர்ப்பத்திற்கேற்ப அமைச்சின் செயலாளரின் ஆலோசனைகள் மற்றும் கண்காணிப்பின் கீழ் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரன் அனுமதியின் கீழ் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது, 2025 ஆம் ஆண்டில் நாடு எதிர்நோக்கிய பொருளாதார, சமூக மற்றும் சர்வதேச வணிக சூழலில் ஏற்பட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியில், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தமது பொறுப்புக்களை செயற்திறனுடனும் பொறுப்புடனும் செய்து முடிக்க தியாகத்துடன் செயற்பட்டது.

அதேபோன்று, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்குபடுத்தல்களுக்காக அரச நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு எமது திணைக்களத்தின் மேலும் கவனம் செலுத்தியது. உரிய அமைச்சுக்கள், ஒழுங்குபடுத்தல்கள் நிறுவனங்கள் மற்றும் ஏனைய தரப்பினருடன் சமீப தொடர்புகளைப் பேணி, தேசிய வணிகக் கொள்கையை செயற்படுத்தும் போது மற்றும் சர்வதேச பொறுப்புக்களை செய்து முடிக்கும் போது அர்த்தமுள்ள பங்களிப்பொன்றை வழங்குவதற்கு முடியுமானது. இது சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் மூலோபாய வணிகக் கட்டுப்பாட்டுத் தேவைகள் தொடர்பான நாட்டின் நம்பிக்கைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் உதவியது.

மேலும், இக் காலத்திற்குள், வெளிப்படைத் தன்மை, செயற்திறன் மற்றும் சேவைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு எமது திணைக்களத்திற்கு முடியுமானது. அச் சீர்த்திருத்தங்களிடையே விசேட முக்கியமொன்றாக அமைவது Stratlink இலத்திரனியல் உரிமங்களை வழங்கும் அமைப்பை முழுமையாக செயற்படுத்துதல் மற்றும் அதனை பலப்படுத்தியமையாகும். புதிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இறக்குமதி மற்றும் ஏற்றுமதிச் சேவை வழங்கும் செயற்பாடுகளை முழுமையாக டிஜிட்டல் மயப்படுத்துவதனூடாக, முன்னர் இருந்த காகிதத் தாள்களை அடிப்படையாகக் கொண்ட (paper-based) முறையிலிருந்து நீங்கி காகிதமற்ற (paperless ) சேவை முறைமையொன்றிற்கு செல்வதற்கு முடியுமானது. இலத்திரனியல் உரிம முறைமையூடாக சேவை பெறுனர்களுக்கு திணைக்களத்திற்கு வருகை தர வேண்டிய

தேவையில்லை என்பதுடன், விண்ணப்பங்களை சமர்ப்பித்தல், ஆவணங்களை பதிவேற்றம் செய்தல், விண்ணப்பங்களின் நிலையைப் பார்வையிடல் மற்றும் உரிய அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் போன்ற அனைத்துச் செயற்பாடுகளையும் நிகழ்நிலை முறைமையூடாக மேற்கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் உள்ளன. அதன் மூலம் சேவைபெறுனர்களின் காலம், செலவு மற்றும் சிரமங்களை மீதப்படுத்த முடியுமானதோடு, சேவையைப் பெற்றுக் கொள்வதில் வசதி மற்றும் பிரவேசமும் விசேடமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இலத்திரனியல் உரிம முறைமையூடாக உரிய அரச நிறுவனங்களுக்கிடையிலான தரவுப் பரிமாற்றம் மற்றும் ஒருங்கிணைப்பை பலப்படுத்துவதூடாக தீர்மானமெடுக்கும் செயற்பாடானது மிகவும் வினைத்திறனாகவும் நம்பிக்கைமிக்கதாக மாறியுள்ளது. இவ்வாறான டிஜிட்டல் சீர்த்திருத்தத்தினூடாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் பொது சேவையை வினைத்திறனாகவும் வெளிப்படைத் தன்மையுமான சேவையொன்றாக மேன்மட்டமொன்றிற்கு கொண்டு வருவதற்கு முடியுமானதை விசேடமாக குறிப்பிட வேண்டும்.

மனித வள அபிவிருத்தி மற்றும் பணிக் குழுவின் தொழில் ரீதியான திறன்களை மேம்படுத்துவதும் எமது கவனம் செலுத்தப்பட்ட மேலும் முக்கியமானதோர் துறையாகும். பயிற்சி நிகழ்ச்சிகள், தெளிவூட்டும் வேலைத்திட்டங்கள் மற்றும் அனுபவங்களைப் பரிமாற்றிக் கொள்ளும் செயற்பாடுகளினூடாக அலுவலர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன் மூலம் சேவை வழங்கும் தரத்தினை மேம்படுத்துவதற்கும், புதிய சவால்களை மிகவும் பொறுப்படனும் பொறுப்புக் கூறலுடனும் செயற்படுத்துவதற்கு முடியுமானது.

இவ் வருடாந்த அறிக்கையினூடாக முன்வைக்கப்பட்டுள்ள முன்னேற்றம், சவால்கள் மற்றும் அனுபவம், எதிர்வரும் வருடத்திற்கு மேலும் சக்திமிக்கதாக, மற்றும் முன்னோடித் திணைக்களமொன்றாக முன்னோக்கிச் செல்வதற்கு முன்னோடியொன்றாகும் என நான் நம்புகின்றேன். எதிர்காலத்திலும் தேசியத் தேவைகள், மக்களின் நம்பிக்கை மற்றும் அரச கொள்கைகளை முழுமையாக கருத்திற் கொண்டும் எமது பணிகளை பொறுப்புடன் மேற்கொள்வதற்கு நாம் உறுதி பூண்டுள்ளோம்.

மேலும், இக் காலப்பகுதியில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக கிடைக்கப் பெற்ற வழிகாட்டல்களும் குறிப்பிடத்தக்கது. அதே போன்று, இத் திணைக்களத்தின் பணிகளுடன் நேரடியாக பிணைந்துள்ள இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுங்கம் மற்றும் வணிக வங்கி முறைமை, உரிமைகளை வழங்கும் போது பரிந்துரை வழங்கும் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் மற்றும் தனியார் துறையின் ஏனைய அனைத்து தரப்பினருக்கும் நன்றிகளை இங்கு தெரிவித்துக் கொள்கின்றேன். இக் காலத்தில் எமது திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களும் வழங்கிய அர்ப்பணிப்பு, பலம் மற்றும் தொழில்முறை உதவிகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன. அவர்களின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மற்றும் உதவியுடன் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு தமது செயற்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு முடியுமானது.

1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்திற்கு கீழான சட்டரீதியான கட்டமைப்புக்குள் அரசின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு இணங்கி தனியார் துறையினரை பெரும்பான்மையாகக் கொண்ட சேவை பெறுனர்களின் எதிர்பார்ப்புக்களை நிவர்த்தி செய்யுமாறு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தை வழிநடத்துவதற்கு மேலும் வினைத்திறனானதும் விளைத்திறனான சேவையொன்றை வழங்குவதற்கு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட திணைக்களத்தின் நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து பணியாற்றுவோம்.

**டீ.டீ. உபுல்மலீ பிரேமதிலக்க**

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகம்

## உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1 | அத்தியாயம் - நிறுவனத்தின் சுயவிபரம் / செயற்படுத்தப்படுவதன் சாராம்சம் | | 1 |
| | 1.1 | அறிமுகம் | 1 |
| | 1.2 | திணைக்களத்தின் செயற்பணி, தூரநோக்கு மற்றும் நோக்கங்கள் | 2 |
| | 1.3 | திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள் | 3 |
| | 1.4 | ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு மற்றும் விளக்கப்படம் | 4 |
| 2 | அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் முன்னோக்குப் பார்வை | | 7 |
| | 2.1 | பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்குபடுத்தல் சம்பந்தமான கொள்கை ரீதியான உத்தரவுகள் | 7 |
| | 2.2 | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்குதல். | 15 |
| | 2.3 | கடந்த 3 வருட காலத்திற்குள் விநியோகிக்கப்பட்ட உரிமங்கள் தொடர்பான தரவு மதிப்பாய்வு | 24 |
| | 2.4 | இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கொடுப்பனவுகள் முறைகள் மற்றும் கட்டளைகள் | 31 |
| | 2.5 | இலங்கையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்குபடுத்தல் மற்றும் வசதியளித்தல் | 33 |
| | 2.6 | புதிய மேம்படுத்தல்கள் | 36 |
| 3 | அத்தியாயம் - வருடத்திற்கான முழு நிதி செயலாற்றுகை | | 38 |
| | 3.1 | 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று | 38 |
| | 3.2 | 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று | 39 |
| | 3.3 | 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்ற ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று | 40 |
| | 3.4 | வருமான சேகரிப்பின் செயலாற்றுகை | 41 |
| | 3.5 | 2025 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை | 42 |
| | 3.6 | நி.பி.208 பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் பிரதிநிதியாக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் | 42 |
| | 3.7 | நிதியல்லாத சொத்துக்களின் அறிக்கையிடலின் செயலாற்றுகை | 42 |
| | 3.8 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 43 |
| 4 | அத்தியாயம் - செயலாற்றுகைக் குறியீடு | | 43 |
| | 4.1 | நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறியீடு (செயலாற்றுகைத் திட்டத்தின் அடிப்படையிலானது) | 43 |
| 5 | அத்தியாயம் - நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் (SDG) அடைவுகளுக்கான செயலாற்றுகை | | 44 |
| | 5.1 | இனங்காணப்பட்ட நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் | 45 |
| | 5.2 | நிலையான அபிவிருத்தி அடைவுகளை அடைவதற்கான வெற்றிகள் மற்றும் சவால்கள் | 50 |
| 6 | அத்தியாயம் - மனித வள சுயவிபரம் | | 50 |
| | 6.1 | பணியாளர்களின் எண்ணிக்கை முகாமைத்துவம் | 50 |

**6.2** திணைக்களத்தின் செயலாற்றுகையினை முன்னிட்டு மனித வளத் தட்டுப்பாடு அல்லது மேலதிகத்தின் அச்சுறுத்தல் **51**

**6.3** மனித வள அபிவிருத்தி **51**

**7 அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை** **60**

**முடிவுரைக் குறிப்பு** **73**

**(இணைப்பு 01) கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

# 1 அத்தியாயம் - நிறுவனத்தின் சுயவிபரம்/ செயற்படுத்துவதன் சாராம்சம்

## 1.1 அறிமுகம்

1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், ஆரம்ப காலத்தில் காணப்பட்ட பாரம்பரிய ஒழுங்குபடுத்தல் பணிகளைத் தாண்டிச் சென்று, சர்வதேச வர்த்தகத்தை எளிதாக்கும் மற்றும் வர்த்தக வசதி மேம்பாட்டிற்குப் பங்களிப்பை வழங்கும் நிறுவனமொன்றாக தற்போது பரிணமித்துள்ளது.

அதன்படி, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினரின் கருத்துக்கள், முன்மொழிவுகள், கண்காணிப்புகள் மற்றும் ஆலோசனைகளைக் கருத்திற் கொண்டு அந் நிறுவனங்களுடன் நெருங்கிப் பணியாற்றி, சந்தர்ப்பத்திற்கேற்ப மூலோபாய அணுகுமுறையூடாக குறித்த சட்டத்தின் அதிகாரங்களின் அடிப்படையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்துடன் தொடர்புடைய கொடுப்பனவு முறைகளை ஒழுங்குபடுத்துவதனூடாக இத் திணைக்களம் ஒரு தனித்துவமான பணியொன்றைச் செய்துள்ளது.

பொருளாதாரத்தின் மீதான அழுத்தம் குறைவடைந்து வரும் சாதகமான போக்கைக் கருத்திற்கொண்டு, விதிக்கப்பட்டிருந்த அனைத்து தற்காலிக இறக்குமதி கட்டுப்பாடுகளையும் 2025 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிற்குள் நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தேசியப் பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு, பொது சுகாதாரம் மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களின் அளவு ரீதியான மற்றும் தர ரீதியான கட்டுப்பாட்டிற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்கும் முறையை மிகவும் பயனுள்ளதாகவும் வினைத்திறனானதாகவும் செயற்படுத்துவதற்கு இந்தத் திணைக்களத்தினால் முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. இதன்போது, பாசல், மொன்றியல் உள்ளிட்ட சுற்றாடல் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகளுக்கு இணங்கி உரிய இறக்குமதி நடைமுறைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், இறக்குமதிப் பொருட்களின் தரத்தை நிர்ணயிப்பதன் மூலம் பொது சுகாதாரப் பாதுகாப்புக்காக உரிய ஏற்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளதுடன், 164 இறக்குமதிப் பொருட்களுக்கு இலங்கைத் தரநிலைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வருகின்றது. அதற்கு மேலதிகமாக, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 1540 ஆம் இலக்க முன்மொழிவை நடைமுறைப்படுத்துவதற்காக புதிய சட்டவிதிகளைத் தயாரிக்கும்பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பல வருடங்களுக்குப் பின்னர் இறக்குமதி உரிமங்களை வழங்குவதற்கான கொள்கைக் கட்டமைப்பைப் புதுப்பிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தற்போதைய தேவைகள் மற்றும் சேவை பெறுனர்களின் வசதிகளைக் கருத்திற்கொண்டு, சட்டக் கட்டமைப்பிற்குள் இறக்குமதி செயல்முறையை விரைவாக மேற்கொள்வதற்கு முடியுமானவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

திணைக்களம் தனது தூரநோக்கு மற்றும் செயற்பணியை முன்னோக்கி கொண்டு செல்லும் வகையில், நிலையான அபிவிருத்தி மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன், வாடிக்கையாளர்களுக்கு திறமையான மற்றும் பயனுள்ள சேவையை வழங்குவதற்காக STRATLINK இலத்திரனியல் உரிமம் வழங்கும் முறைமையை நிறுவி 2025.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

## 1.2 திணைக்களத்தின் தூரநோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்

### 1.2.1 நிறுவனத்தின் தூரநோக்கு

நிலைபேறான அபிவிருத்தியடைந்த ஓர் நாட்டை நோக்கி இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளை ஒழுங்குபடுத்தல்

### 1.2.2 நிறுவனத்தின் செயற்பணி

நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், பொது சுகாதாரம், சூழல் பாதுகாப்பு போன்ற அனைத்தையும் கவனத்திற் கொண்டு, பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் தொடர்பில் அரசினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானங்களை 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தல்

### 1.2.3 நோக்கங்கள்

நாட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் சூழலைப் பாதுகாப்பதற்காக அரசினால் அவ்வப்போது எடுக்கப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களுக்கு இணங்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை ஒழுங்குபடுத்தல்.

## 1.3 திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்

i. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டிற்குரிய ஒழுங்குவிதிகள் உள்ளடக்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடல்.

ii. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டிற்கு உரிய செயற்பாட்டு வழிகாட்டல்களை வணிக வங்கிகளுக்கு, இலங்கை சுங்கத்திற்கு மற்றும் பிற நிறுவனங்களுக்கு வழங்கல்.

iii. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடுகள்) தொடர்பாக வெளியிடப்படும் ஒழுங்குவிதிகளுக்குரிய உள்ளக சுற்றறிக்கைகளை வெளியிடல்.

iv. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் கீழ் இந் நாட்டுப் பொருளாதார நலன்கருதி உரிமங்களை வழங்குதல் மற்றும் ஒழுங்குபடுத்தல்.

v. உரிமக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பொருட்களை இறக்குமதி செய்த பின்னர் பற்றுக்களை (Debit) வழங்குதல்.

vi. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் அல்லது உரிமங்களின் நிபந்தனைகளை மீறும் இறக்குமதியாளர்களுக்கு மேலதிகக் கட்டணங்களை விதித்தல்.

vii. மூலோபாய வர்த்தக முகாமைத்துவ முறையொன்றை மற்றும் தரத்திலான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்கும் முறையொன்றை உருவாக்குவது தொடர்பில் உரிய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

viii. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தினை மேம்படுத்துவதற்காக உலக வர்த்தக சங்கத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதிகளைச் செய்து கொடுத்தல்.

ix. பாசல் மாநாடு, மொன்ரியல் மாநாடு போன்ற சர்வதேச மாநாடுகளுக்கு இணங்குவதற்கு சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து செயற்படல்.

x. சர்வதேச வர்த்தகரீதியான கொடுக்கல் வாங்கல்களுக்கு பொருத்தமான ஒழுங்குவிதிகளை வெளியிடல் மற்றும் ஒழுங்குபடுத்தல்.

xi. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் தொடர்பில் பிரச்சினைகள் தோன்றுகின்ற சந்தர்ப்பங்களில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு தேவையான உதவிகள் / ஆலோசனைகளை வழங்கல்.

xii. திணைக்களப் பணியாளர்களின் திறமைகள், திறன்கள் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு பயிற்சி நிகழ்வுகளை நடத்துதல் மற்றும் ஊழியர் நலன்புரி.

xiii. உரிய அரச கட்டணங்களைச் சேகரித்து, ஒழுங்கிணைந்த நிதிக்கு வைப்புச் செய்தல்.

## 1.4 ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு மற்றும் விளக்கப்படம்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்குகின்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகம் நிறுவனத் தலைவராகக் கடமையாற்றுகிறார்.

1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகளை விதித்தல் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்குதல் உள்ளிட்ட ஒட்டுமொத்த இறக்குமதி மற்றும் ஏற்றுமதி துறையின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக இத் திணைக்களம் கீழ்வரும் பிரிவுகள் மற்றும் அலகுகளின் அடிப்படையில் இயங்குகின்றது.

I. தாபனப் பிரிவு
II. கணக்குப் பிரிவு
III. ஆய்வுகள் மற்றும் கொள்கைகள் பிரிவு
IV. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
V. உரிமங்களை வழங்கும் பிரிவுகள்

- அலகு 1 – ஔடதங்கள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள்
- அலகு 2 – பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்கள்
- அலகு 3 – இரசாயனப் பொருட்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் தொழில்நுட்ப மூலப்பொருட்கள் மற்றும் ஏற்றுமதிகள்
- அலகு 4 – கையடக்கத் தொலைபேசிகள், தொலைத் தொடர்பு சாதனங்கள் மற்றும் பிற
- அலகு 5 – விலங்குகள், விலங்கு உற்பத்திகள் மற்றும் ஏனைய இறக்குமதிகள்

VI. தகவல் தொழிநுட்பப் பிரிவு
VII. சட்டப் பிரிவு

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தற்போதைய ஊழியர்கள் பின்வரும் நிறுவன விளக்கப்படத்தின் (organization Chart) கீழ் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்தும் இக் கடமைகளை செயற்திறன் மற்றும் வினைத்திறனான முறையில் நிறைவேற்றுவதற்காகவும் சேவை செய்வதற்காகவும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளனர்.

2025.12.31 ஆம் திகதிக்கு அனுமதிக்கப்பட்ட பணிக்குழுவினர் 122 ஆக இருப்பதுடன், சிரேட்ட நிலையிலிருந்து ஆரம்ப நிலைவரை 18 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், தற்போதுள்ள பணிக்குழுவினரைக் கொண்டு மிகவும் சிறப்பானதோர் சேவையை வழங்குவதற்கு 2025 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பணிக்குழுவினர் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

# 2025.12.31 ஆம் திகதிக்கு ஊழியர் தொடர்பான தகவல்கள்

| பதவி நிலை | சேவை/தரம் | | | | அனுமதிக்கப்பட்ட ஊழியர் | தற்போதைய ஊழியர் | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|---|---|
| **சிரேஷ்ட நிலை** | | | | | | | |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் | இ.நி.சே | விஷேட | SL 3 | நிறை வேற்றுத் தரம் | 01 | 01 | 00 |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் | இ.நி.சே | I | SL 1 | நிறை வேற்றுத் தரம் | 02 | 01 | 01 |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்) | நாடளாவிய சேவைகள் | I | SL 1 | நிறை வேற்றுத் தரம் | 01 | 01 | 00 |
| பிரதி/உதவி கட்டுப்பாட்டாளர் | இ.நி.சே | II/III | SL 1 | நிறை வேற்றுத் தரம் | 06 | 05 | 01 |
| பிரதான கணக்காளர் | இ.க.சே | I | SL 1 | நிறை வேற்றுத் தரம் | 01 | 01 | 00 |
| பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | இ.க.சே | I | SL 1 | நிறை வேற்றுத் தரம் | 01 | 01 | 00 |
| சட்ட அலுவலர் | திணைக்களம் சார்ந்த | II/III | SL 1 | நிறை வேற்றுத் தரம் | 01 | 01 | 00 |
| உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழிநுட்பம்) | இ.த.தொ.தொ.சே | III | SL 1 | நிறை வேற்றுத் தரம் | 01 | 01 | 00 |
| | | | | | **14** | **12** | **02** |
| **மூன்றாம் நிலை** | | | | | | | |
| நிர்வாக அலுவலர் | மு.சே.உ.சே | அதி விஷேட | MN 7 | மூன்றாம் தரம் | 01 | 01 | 00 |
| மொழிபெயர்ப்பாளர் | மொ.பெ.சே | I/II | MN 6 | மூன்றாம் தரம் | 02 | 01 | 01 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப அலுவலர் | இ.த.தொ.தொ.அ.சே | II | MN 6 | மூன்றாம் தரம் | 01 | 01 | 00 |
| | | | | | **04** | **03** | **01** |
| **இரண்டாம் நிலை** | | | | | | | |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் | இ.த.தொ. தொ.உ.சே | III | MT 1 | இரண்டாம் தரம் | 03 | 03 | 00 |
| தரவு முகாமைத்துவ உதவியாளர் | திணைக்களம் சார்ந்த | | MN 4 | இரண்டாம் தரம் | 01 | 01 | 00 |
| விசாரணை உதவியாளர் | திணைக்களம் சார்ந்த | | MN 4 | இரண்டாம் தரம் | 01 | 01 | 00 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | அ.உ.சே | I/II/III | MN 4 | இரண்டாம் தரம் | 23 | 20 | 03 |
| முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | மு.சே.உ.சே | I/II/III | MN 2 | இரண்டாம் தரம் | 56 | 49 | 07 |
| | | | | | **84** | **74** | **10** |
| **ஆரம்ப நிலை** | | | | | | | |
| வாகன ஓட்டுனர் | வாகன ஓட்டுனர் சேவை | I/II/III | PL 3 | முதல் தரம் | 05 | 02 | 03 |
| அலுவலக உதவியாளர் | அ.உ.சே | I/II/III | PL 1 | முதல் தரம் | 15 | 13 | 02 |
| | | | | | **20** | **15** | **05** |
| **மொத்தம்** | | | | | **122** | **104** | **18** |




உ.க - உதவிக் கட்டுப்பாட்டாளர்
அ.உ - அபிவிருத்தி உத்தியோகத்தர்
த.தொ.தொ - தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம்
பி.க - பிரதிக் கட்டுப்பாட்டாளர்
த.மு.உ - தரவு முகாமைத்துவ உதவியாளர்
நி.அ - நிருவாக அலுவலர்
உ.ப - உதவிப் பணிப்பாளர்
வி.உ - விசாரணை உதவியாளர்
பி.மு.சே.அ - பிரதான முகாமைத்துவ சேவை அலுவலர்
ஆ மற்றும் கொ - ஆய்வு மற்றும் கொள்கை
மு.சே.அ - முகாமைத்துவ சேவை அலுவலர்

# 2. அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் முன்னோக்குப் பார்வை

## 2.1 பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்குபடுத்தல் பற்றிய கொள்கை ரீதியான கட்டளைகள்

இலங்கை மத்திய வங்கியினது உடன்பாட்டுடன் 304 இயைபு முறைக் குறியீடுகளின் (HS Codes) கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய மோட்டார் என்ஜின் பயன்படுத்தப்படாத பொருட்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிக இறக்குமதித் தடையை சில சில கட்டுப்பாடுகளின் கீழ் நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தலானது 2025 ஆம் ஆண்டில் இறக்குமதி சம்பந்தமாக எடுக்கப்பட்ட பிரதான முடிவுகளாகப் பார்க்க முடிகிறது.

அவ்வாறு வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நீக்கப்பட்டவுடன் அந்நிய செலாவணி இருப்புகளுக்கு ஏற்படும் பாதிப்பை கண்காணிப்பதற்காக வணிக வங்கிகளினால் திறக்கப்படும் கடன் கடிதங்களின் பெறுமதி மற்றும் எண்ணிக்கையை தினந்தோறும் அறிக்கையிட்டு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கு உதவுதலானது 2025 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக செய்யப்பட்டது.

அதேபோன்று, மக்களுக்கு உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக நுகர்வுப் பொருட்கள் இறக்குமதி தொடர்பாக அரசினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களை சட்டரீதியாகவும் முறையாகவும் செயற்படுத்துவதற்குத் தேவையாக ஒழுங்குவிதிகளை வெளியிடுவது 2025 ஆம் ஆண்டில் நடைபெற்றது.

மேலும், 2025 ஆம் ஆண்டில் அவ்வப்போது ஏற்பட்ட சீரற்ற காலநிலை நிலைமைகள் மற்றும் திட்வா சூறாவளி காரணமாக ஏற்பாட்ட அனர்த்த நிலைமை காரணமாக அத்தியாவசியப் பொருட்களின் தொடர்ச்சியாக விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்கு மற்றும் அனர்த்த நிவாரணமாக வெளிநாட்டவர்களிடமிருந்து கிடைக்கும் நன்கொடைப் பொருட்களை துரிதமாக சுங்க விடுவிப்பு செய்வதற்கு வசதிகளை அளிப்பதற்கு ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 2.1.1 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் புதிய ஒழுங்குவிதிகளை வெளியிடல்.

| தொடர் இல. | அதிவிசேட வர்த்தமானி இல. | திகதி | விபரம் |
|---|---|---|---|
| 1 | 2421/04 | 2025.01.27 | வணிக நோக்க அல்லது பொருட்கள் போக்குவரத்துப் பணிக்காகப் பயன்படுத்தப்படும் வாகன இறக்குமதிக்கான தற்காலிக இறக்குமதித் தடையை நீக்குதல். |
| 2 | 2421/44 | 2025.01.31 | தனிப்பட்ட பாவனைக்குப் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்களை (கார், வேன், ஸ்போர்ட்ஸ் யுட்டிலிட்டி வாகனங்கள் போன்ற) இறக்குமதி செய்வதற்கான தற்காலிக இறக்குமதித் தடையை நீக்குதல் மற்றும் அதிகபட்ச வயதெல்லையைத் தாண்டிய மோட்டார் வாகனங்களுக்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் தேவையை (ICL) விதித்தல். |

| | | | |
|---|---|---|---|
| 3 | 2428/07 | 2025.03.19 | பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கு ஏற்றுமதிச் சோதனைச் சான்றிதழ்களை வழங்குவதற்கு அனைத்து நாடுகளுக்கும் அதிகாரமளிக்கப்பட்ட பரிசோதகரொருவராக பியுரோ வெரிடாஸ் நிறுவனத்தை நியமித்தல் மற்றும் 2013 ஏப்ரல் 03 ஆம் திகதிய 1804/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் இலக்க ஒழுங்குவிதியின் படி தேவைப்படும் ஏற்றுமதி நாட்டின் வங்கியின் உத்தியோகபூர்வ முத்திரை இல்லாது கிடைக்கப்பெற்ற மோட்டார் வாகனங்களின் ஏற்றுமதிச் சோதனைச் சான்றிதழை நிகழ்நிலை முறையூடாக உறுதிப்படுத்தி வழங்குவதற்கு உரிமம் பெற்ற வங்கிகளுக்கு அதிகாரமளித்தல். |
| 4 | 2434/12 | 2025.04.29 | 2023.01.01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் அடிப்படையில் இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் வழங்குவது இடைநிறுத்தப்பட்ட பொருட்களின் பட்டியலை மீளாய்வு செய்து தெரிவு செய்யப்பட்ட பொருட்களை அப் பட்டியலிலிருந்து நீக்குவது மற்றும் எந்தவொரு நாட்டிலும் பதிவு செய்யப்படாத (புதிய) மின்சார சைக்கிள்களை இறக்குமதி செய்தல், இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் தேவையிலிருந்து விடுவித்தல். |
| 5 | 2435/02 | 2025.05.05 | 2025 ஏப்ரல் 28 ஆம் திகதிய 2434/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் மின்சார வாகனங்களுக்கு வெளியிடப்பட்ட இயைபு முறைக் குறியீடுகளின் தேசிய உப பிரிவுகள், மோட்டார் வாகன இறக்குமதிக்கு உரித்தாகும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளுக்கு உட்சேர்த்தல். |
| 6 | 2437/04 | 2025.05.19 | இயைபு முறைக் குறியீடு 2501.00 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அயடின் சேர்க்கப்படாத ஆரம்ப நிலை உப்பு மற்றும் உணவாகக் கொள்ள முடியுமான அயடின் சேர்க்கப்பட்ட உப்பு (தூளாக்கப்பட்ட மற்றும் உப்புக் கட்டி) இறக்குமதிக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் (ICL) தேவையை 2025 யூன் 10 வரை நீக்குதல். |
| 7 | 2449/60 | 2025.08.15 | 2024.05.17 ஆம் திகதிய 2384/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் செல்லுபடியாகும் கால எல்லையை 2025 செப்டம்பர் 30 வரை நீடித்தல். |
| 8 | 2458/43 | 2025.10.15 | இயைபு முறைக் குறியீடு 1006.30.29 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள கீரி சம்பா அரிசியை ஒத்ததான GR 11/ பொன்னி சம்பா அரிசி இறக்குமதிக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு |

| | | | |
|---|---|---|---|
| | | | உரிமத் (ICL) தேவையை, 2025 ஒக்டோபர் 28 வரை நீக்குதல். |
| 9 | 2459/46 | 2025.10.24 | 2013 ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதிய 1804/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் 5 ஆம் இலக்க ஒழுங்குவிதிக்கு இணங்காது இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் சம்பந்தமான நீதிமன்ற நடவடிக்கை தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் அவ் வாகனங்களை இலங்கை சுங்கத்திலிருந்து விடுவிப்பு செய்வதற்கு அனுமதி வழங்கல். |
| 10 | 2465/07 | 2025.12.01 | திட்வா புயலுடன் ஏற்பட்ட அவசர அனர்த்த நிலைமை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு பல்வேறு வெளிநாட்டு நன்கொடையாளர்களினால் வழங்கப்படும் பொருட்களை சுங்க விடுவிப்பு செய்யும் போது உரித்தாகும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் நிபந்தனைகளுடன் விடுவிப்பை வழங்குதல் மற்றும் 1990 சுவசரிய மன்றத்தின் நேரடிப் பயன்பாட்டிற்கு அன்பளிப்பாக அல்லது நன்கொடையாகக் கிடைக்கப் பெறும், காற்றுப்பை இல்லாத, பதிவு செய்யப்படாத (புதிய) நோயாளர் காவு வண்டிகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கல். |

## அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2421/04 – 2025.01.27

2020.05.22 ஆம் திகதிய 2176/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலம், தெரிவு செய்யப்பட்ட இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள வாகனங்களை இறக்குமதி செய்வது தற்காலிகமாக தடை செய்யப்பட்டது. அத் தற்காலிக இறக்குமதித் தடை, 2023.01.01 ஆம் திகதிய 2312/78 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் 304 இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

2024.09.12 ஆம் திகதிய 24/1945/604/208 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தை அடிப்படையாகக் கொண்டு, மேலே குறிப்பிடப்பட்ட 304 இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடையை மூன்று கட்டங்களில் நீக்குவதற்கு, 2024.09.13 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி, அதன் இரண்டாம் கட்டத்தின் கீழ் வணிக நோக்க அல்லது பொருட்கள் போக்குவரத்துப் பணிக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான தற்காலிக இறக்குமதித் தடையை நீக்குவதற்கு 2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள், 2025.01.27 ஆம் திகதிய 2421/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2421/44 – 2025.01.31

மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தற்காலிகத் தடையை நீக்குவதற்கான மூன்றாம் கட்டமாக, தனிப்பட்ட பயன்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும் கார், வான் போன்ற மோட்டார் வாகனங்கள் உள்ளிட்ட 304 இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களுக்கு நடைமுறையிலிருந்த தற்காலிக இறக்குமதித் தடையை நீக்குவதற்கும் (2024.12.18 ஆம் திகதிய 2415/35 ஆம் இலக்க மற்றும் 2025.01.27 ஆம் திகதிய 2421/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளை இரத்துச் செய்து) அவ் வாகனத் தொகுதியில் அதிகபட்ச வயதெல்லையைத் தாண்டிய மோட்டார் வாகனங்களை, இரட்டை இயக்க (Two-stroke) என்ஜினைக் கொண்ட முச்சக்கர வண்டிகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட துவிச்சக்கர வண்டிகளை இடைநிறுத்தப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கும் 2025 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள், 2025.01.31 ஆம் திகதிய 2421/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2428/07 – 2025.03.19

நிருவாக மற்றும் தரநிலைத் தேவைகள் காரணமாக இலங்கைக்கு வாகனங்களை இறக்குமதி செய்யும் போது அவ் வாகனங்கள் தொடர்பான தொழில்நுட்ப மற்றும் உற்பத்தித் தகவல்களை உறுதி செய்வதற்காக உரிய வாகனத்தை ஏற்றுமதி செய்யும் நாட்டில் செயற்படும், அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் ஏற்றுமதிச் சோதனைச் சான்றிதழொன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென 2006 யூலை 21 ஆம் திகதிய 1454/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் முதற்தடவையாக ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டதுடன் 2013 ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதிய 1804/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் மூலம் அவ் ஒழுங்குவிதிகள் தொடர்ந்து நடைமுறைப்படுகின்றது.

எனினும், ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு ஏற்றுமதிச் சோதனைச் சான்றிதழை வழங்குவதற்கு பியுரோ வெரிடாஸ் நிறுவனத்திற்கு முடியுமென மேற்கூறப்பட்ட 2013 ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதிய 1804/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் நேரடியாகக் குறிப்பிடப்படவில்லையென அவதானித்த பின்னர் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு அந் நிறுவனத்தின் மூலம் ஏற்றுமதிச் சோதனைச் சான்றிதழை வழங்குவதை சட்டரீதியாக்குவதற்கு ஒழுங்குவிதிகளைத் தயாரிக்க வேண்டுமென கண்டறியப்பட்டது.

மேலும், ஏற்றுமதி செய்யப்படும் மோட்டார் வாகனம் தொடர்பாக 2013 ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதிய 1804/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் முன்வைக்கப்பட வேண்டிய ஆவணங்களில் கடன் கடிதத்தை திறக்கும் உள்நாட்டு வங்கியினதும் ஏற்றுமதி செய்யும் நாட்டின் முகவர் வங்கியின் உத்தியோகபூர் முத்திரை இடப்பட வேண்டுமென ஒழுங்குவிதியொன்று விதிக்கப்பட்டிருந்தாலும், சில சந்தர்ப்பங்களில் ஏற்றுமதி செய்யும் நாட்டின் முகவர் வங்கியினால் உரிய ஆவணங்களில் தமது உத்தியோகபூர்வ முத்திரையை இடாது உள்நாட்டு வங்கிக்கு ஆவணங்களை விடுவிப்பதன் காரணமாக அவ் ஒழுங்குவிதிக்கமைய செயற்படுவதில் தடைகள் ஏற்பட்டன. அதன்படி, நிகழ்நிலை முறையூடாக தகவல்களை அணுகும் திறனின் மேம்பாடுகள் மற்றும் நிகழ்நிலை வழிமுறைகளினூடாக தகவல்களை உறுதிப்படுத்தும் இயலுமையைக் கருத்திற் கொண்டு காலத்திற்கேற்பவும் நடைமுறைக்கேற்பவும் செயற்படுவதற்கு ஏற்ற வகையில், அவ் ஒழுங்குவிதிகளின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுமதிச் சோதனைச் சான்றிதழ் மற்றும் உதிரிப் பாகப் பட்டியல் உள்ளிட்ட வாகனத்தின் விரிவான தரநிலைச் சோதனை அறிக்கை போன்ற ஆவணங்களில் ஏற்றுமதி செய்யப்படும் நாட்டின் முகவர் வங்கியினால் உத்தியோகபூர்வ முத்திரை இடுவது தொடர்பான அவ் ஒழுங்குவிதியைத் திருத்தம் செய்வதற்கான தேவை கண்டறியப்பட்டது.

மேற்படி விடயங்கள் உள்ளடங்குமாறு, நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகளை திருத்தம் செய்வதற்கு 2025 மார்ச் மாதம் 14 ஆம் திகதி திறைசேரி செயலாளரின் தலைமையில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் 2025 ஆம் ஆண்டின் 03 ஆம்

இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள், 2025 மார்ச் 19 ஆம் திகதிய 2428/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தில் மூலம் வெளியிடப்பட்டன.

## அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2434/12 – 2025.04.29

கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக ஏற்பட்ட எதிர்பாராத பொருளாதார நிலைமைகள் காரணமாக அந்நிய செலாவணி இருப்பு மற்றும் நிதிச் சந்தையில் ஏற்பட்ட அதிகரித்த அழுத்தத்தைத் தளர்த்தும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையொன்றாக இறக்குமதி உரிமக் கட்டுப்பாட்டுக்குள் உள்ள தெரிவுசெய்யப்பட்ட பொருட்களுக்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை (ICL) வழங்குவது மீள் அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டது.

2025 பெப்ரவரி 01 ஆம் திகதியாகும் போது மோட்டார் வாகனம் உள்ளிட்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்கு காணப்பட்ட தற்காலிகத் தடையை முழுமையாக நீக்கப்பட்டதுடன் காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு இடைநிறுத்தப்பட்ட உரிமப் பொருட்களின் பட்டியலையும் மீளாய்வு செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டது.

அதன்படி, வணிக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம், இலங்கை சுங்கம் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் போன்ற நிறுவனங்களின் அலுவலர்களினால் 2025 ஏப்ரல் 07 ஆம் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில், இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் (ICL) வழங்குவது இடைநிறுத்தப்பட்ட பொருட்களின் பட்டியலை மீளாய்வு செய்யப்பட்டதுடன் காலத்தின் தேவைக்கேற்ப, கீழுள்ள பொருட்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் (ICL) வழங்குவதற்கான இடைநிறுத்தத்தை நீக்குவது சிறந்தது என முடிவெடுக்கப்பட்டது.

i. 2025.01.27 ஆம் திகதிய 25/0070/826/001 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் பயன்படுத்தப்பட்ட ஆடைகளை இறக்குமதி செய்வதற்கு (கட்டம் கட்டமாக) அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், பயன்படுத்தப்பட்ட ஆடைகள் (இயைபு முறைக் குறியீடு 6309.00.90)
ii. முன்வைக்கப்பட்டுள்ள தனிப்பட்ட கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டு, மோட்டார் வாகனங்களை ஒன்றுகோர்க்கும் கைத்தொழில் மற்றும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்குத் தேவையான வாகன உதிரிப் பாகங்களை ( இயைபு முறைக் குறியீடுகள் 8408.20.10, 8408.90.10, 8707.10.50, 8707.10.90, 8707.90.90 மற்றும் 8714.10.10)
iii. 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் உரிமங்களைப் பெற்றுள்ள மற்றும் முதலீட்டு சபையில் பதிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டு, சுற்றுலா மேம்படுத்தலுக்குப் பங்காற்றும் சீட்டாட்ட விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகளை வழங்கும் இடங்களில் உள்ள விளையாட்டு உபகரணங்கள் (இயைபு முறைக் குறியீடுகள் 9504.30.10, 9504.30.90 மற்றும் 9504.90.10)

மேலும், 2025 சனவரி 31 ஆம் திகதிய 2421/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மோட்டார் வாகன இறக்குமதிகளுக்குக் காணப்பட்ட தற்காலிக இடைநிறுத்தத்தை முழுமையாக நீக்கியதைக் கருத்திற் கொண்டு, இறக்குமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த ஆனாலும் 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட எரிபொருள் நெருக்கடி காரணமாக, இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களின் (ICL) கீழ் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட மின்சார துவிச்சக்கர வண்டிகளில் எந்தவொரு நாட்டிலும் பதிவு செய்யப்படாத மின்சார துவிச்சக்கர வண்டிகளை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் (ICL) தேவையை நீக்கி, அவற்றை 2025 சனவரி 31 ஆம் திகதிய 2421/44 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் கீழ் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவதற்கு பொருத்தமென முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி, அம் முடிவை நடைமுறைப்படுத்தும் வகையில் 2025 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஒழுங்குவிதிகள், 2025 ஏப்ரல் 29 ஆம் திகதிய 2434/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2435/02 – 2025.05.05

அமப/25/0663/804/078 ஆம் இலக்க மற்றும் 2025 ஏப்ரல் 07 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான 2025 ஏப்ரல் 21 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டவாறு, 2025 ஏப்ரல் 28 ஆம் திகதிய 2434∴02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட வருமானப் பாதுகாப்புக் கட்டளைகளுக்கமைய மின்சார வாகனங்களுக்கு வெளியிடப்பட்டுள்ள இயைபு முறைக் குறியீடுகளின் தேசிய உப பிரிவுகளை, மோட்டார் வாகன இறக்குமதிக்கு உரித்தாகும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் உட்சேர்த்து 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் விதிக்கப்பட்டு 2025 மே 05 ஆம் திகதிய 2435/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2437/04 – 2025.05.19

2023 சனவரி மாதம் 01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் மூலம், இயைபு முறைக் குறியீடு 2501.00 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள உப்பு இறக்குமதி, இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

உள்நாட்டு சந்தையில் காணப்பட்ட உப்புத் தட்டுப்பாட்டைக் கருத்திற் கொண்டு ''வீட்டு மற்றும் கைத்தொழில் தேவைகளுக்காக அயடின் சேர்க்கப்படாத ஆரம்ப நிலை உப்பு மற்றும் உணவாகக் கொள்ள முடியுமான அயடின் சேர்க்கப்பட்ட உப்பு (தூளாக்கப்பட்ட மற்றும் உப்புக் கட்டி) இறக்குமதி செய்தல்'' என்ற தலைப்பில் வணிக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் முன்வைத்த 2025 மே 15 ஆம் திகதிய 25/0797/817/021 ஆம் இலக்க விஞ்ஞாபனம் தொடர்பான 2025 மே 15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டவாறு, இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத்தைப் பெற்றுக் கொள்ளாது இயைபு முறைக் குறியீடு 2501.00 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அயடின் சேர்க்கப்படாத ஆரம்ப நிலை உப்பு மற்றும் உணவாகக் கொள்ள முடியுமான அயடின் சேர்க்கப்பட்ட உப்பை (தூளாக்கப்பட்ட மற்றும் உப்புக் கட்டி) 2025 யூன் 10 ஆம் திகதி வரை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவதற்கு 2025 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள், 2025 மே 19 ஆம் திகதிய 2437/04 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2449/60 – 2025.08.15

''சுற்றுலாத்துறையைத் துரிதமாக அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்'' என்ற தலைப்பில் முன்னாள் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட 2024 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதிய 24/0644/615/003-I ஆம் இலக்க விஞ்ஞாபனம் தொடர்பான 2024 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில், சுற்றுலாத்துறை விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட ''வாகன இறக்குமதி உரிமமொன்றின்'' கீழ் சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்திற்கான நேரடிப் பாவனைக்கு மாத்திரம் சிறிய அளவிலான பஸ்கள் மற்றும் 250 பஸ்கள் மற்றும் 750 வேன்கள் (SUV மற்றும் கார்கள் தவிர்ந்த 6-15 இருக்கைகள் மற்றும் நழுவு கதவுகளைக் கொண்ட வேன்) உள்ளிட்ட 1,000 புதிய மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கி 2024 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள், 2024 மே மாதம் 17 ஆம் திகதிய 2384/34 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டன. இவ் ஒழுங்குவிதிகள் 2025 யூன் மாதம் 30 வரை அமுல்படுத்தப்பட்டன.

இந்நிலையில், மேற்கூறப்பட்ட கால எல்லையை 2025 செப்டம்பர் மாதம் 30 வரை நீட்டிப்பதற்கு முன்மொழிந்து வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை

அமைச்சர் முன்வைத்த 2025 யூலை 24 ஆம் திகதிய 25/1339/807/016-I ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பான 2025 ஆகஸ்ட் 04 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அவ் விஞ்ஞாபனத்திற்கான நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் கண்காணிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் 2024 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் செல்லுபடியாகும் காலம் 2025-07-01 ஆம் திகதி முதல் 2025-09-30 ஆம் திகதி வரை 03 மாத காலத்தினால் நீட்டிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதுடன் அவ் அமைச்சரவைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, 2025 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள், 2025 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிய 2449/60 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2458/43 – 2025.10.15

2023 சனவரி மாதம் 01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளுக்கமைய, இயைபு முறைக் குறியீடு 1006.30.19 மற்றும் 1006.30.29 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அரிசி இறக்குமதி செய்வதற்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்குவது மீள் அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளது.‘‘சந்தையில் பற்றாக்குறை ஏற்படும் என கண்காணிக்கப்பட்ட அரிசி வகைகளின் போதுமான வழங்கலை உறுதிப்படுத்தல்’’ என்ற தலைப்பில் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த 2025 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதிய 25/1942/817/013-XV ஆம் இலக்க ஒன்றிணைந்த விஞ்ஞாபனத்திற்கான 2025 ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களைப் பெற்றுக் கொள்ளாது இயைபு முறைக் குறியீடு 1006.30.29 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள கீரி சம்பா அரிசியை ஒத்ததான GR 11 / பொன்னி சம்பா அரிசி வகையை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

‘‘சந்தையில் பற்றாக்குறை ஏற்படும் என கண்காணிக்கப்பட்ட அரிசி வகைகளின் போதுமான வழங்கலை உறுதிப்படுத்தல்’’ என்ற தலைப்பில் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த 2025 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதிய 25/1942/817/013-XV ஆம் இலக்க ஒன்றிணைந்த விஞ்ஞாபனத்திற்கான 2025 ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களைப் பெற்றுக் கொள்ளாது இயைபு முறைக் குறியீடு 1006.30.29 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள கீரி சம்பா அரிசியை ஒத்ததான GR 11 / பொன்னி சம்பா அரிசி வகையை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அவ் அமைச்சரவைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் வகையில், ஒருவருக்கு இறக்குமதி செய்ய முடியுமான அதிகபட்ச அரிசித் தொகை 520 மெட்ரிக் தொன்களாக இருத்தல், கப்பல் ஏற்றுமதிச் சீட்டில் கப்பலேற்றிய திகதி 2025 ஒக்டோபர் 15 முதல் 2025 ஒக்டோபர் 28 இற்கு இடைப்பட்ட தினமாக இருத்தல் மற்றும் 2025 நவம்பர் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கை சுங்கத்திலிருந்து விடுவித்துக் கொள்ளல் ஆகிய நிபந்தனைகளின் கீழ் இயைபு முறைக் குறியீடு 1006.30.29 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள கீரி சம்பா அரிசியை ஒத்ததான GR 11 / பொன்னி சம்பா அரிசி வகையை இறக்குமதி செய்வதற்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் (ICL) தேவையை நீக்குவதற்காக 2025 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள், 2025 ஒக்டோபர் 15 ஆம் திகதிய 2458/43 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2459/46 – 2025.10.24

பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகன இறக்குமதியின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகளைக குறிப்பிட்டு 2013 ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதிய 1804/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் 5 ஆம் இலக்க ஒழுங்குவிதிக்கு இணங்காது

இறக்குமதி செய்ததன் காரணமாக இலங்கை சுங்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பாக நடைபெற்று வரும் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்ட உடன்பாட்டு நிபந்தனை மற்றும் அது தொடர்பாக உரிய தரப்பினருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர் நீதிமன்றத்தின் முன்னிலையில் ஏற்றுக்கொண்டவாறு 2013 ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதிய 1804/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் 5 ஆம் இலக்க ஒழுங்குவிதிக்கு இணங்காது இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை, அதன் நிபந்தனையின் கீழ் இலங்கை சுங்கத்திலிருந்து விடுவிப்பு செய்வதற்கு அனுமதி வழங்குவதற்காக 2025 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள், 2025 ஒக்டோபர் 24 ஆம் திகதிய 2459/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2465/07 – 2025.12.01

திட்வா புயலுடன் ஏற்பட்ட அவசர அனர்த்த நிலைமை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு பல்வேறு வெளிநாட்டு நன்கொடையாளர்களினால் வழங்கப்படும் பொருட்களுக்கு, வரி விலக்களித்தல், எளிய செயன்முறையூடாகப் பெற்றுக் கொள்ளல், துரித விடுவிப்பு மற்றும் விநியோகத்திற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து 2025.11.29 மற்றும் 2025.11.30 ஆகிய தினங்களில் சனாதிபதி செயலகத்தில் உரிய தரப்பினரின் நடைபெற்ற கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது. அதன்படி, வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டியின் படி வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரின் அனுமதியின் கீழ் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பெயரில் அல்லது எந்தவொரு அரச நிறுவனமொன்றின் பெயரில் கிடைக்கும் பொருட்களுக்கு உரித்தாகும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் (இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத்தைப் பெற்றுக் கொள்ளல், தரநிலைகளை உறுதி செய்தல்) நிபந்தனைகளுடன் விடுவிப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில், இவ் அவசர அனர்த்த நிலைமை காரணமாக நோயாளர் காவு வண்டிகளின் தேவை தொடர்பாக 2025.12.01 ஆம் திகதி நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது. அதன்போது, 1990 சுவசரிய மன்றத்தின் நேரடிப் பயன்பாட்டிற்கு அன்பளிப்பாக அல்லது நன்கொடையாக, காற்றுப்பை இல்லாத, பதிவு செய்யப்படாத (புதிய) நோயாளர் காவு வண்டிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அப்போதைய சுகாதார அமைச்சரின் '1990 சுவசரிய மன்றத்திற்கு இலவச அன்பளிப்பாக நோயாளர் காவு வண்டிகளைப் பெற்றுக் கொள்ளல்' என்ற தலைப்பிலான 2024 யூன் 18 ஆம் திகதிய 24/1261/610/048 ஆம் இலக்க விஞ்ஞாபனத்திற்கு வழங்கப்பட்ட 2024 யூலை 09 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்ட காற்றுப்பை இல்லாத, பதிவு செய்யப்படாத (புதிய) 150 நோயாளர் காவு வண்டிகளை, இச் சந்தர்ப்பத்தில் பெற்றுக் கொள்வதற்கும் ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, அத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, 2025 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள், 2025 டிசம்பர் 01 ஆம் திகதிய 2465/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டன.

## 2.1.2 செயற்பாட்டு ஆலோசனைகள் மற்றும் உள்ளக சுற்றறிக்கைகள் வெளியிடல்

திணைக்களத்தினால் ஒரு வருடத்தில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் தொடர்பாக இலங்கை சுங்கம், வணிக வங்கிகள் மற்றும் திணைக்கள அலுவலர்களை அறிவுறுத்துவது மிகவும் முக்கியமானதாகும். எனவே, வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொடர்புடைய தரப்பினரின் அறிந்து கொள்தலுக்காக செயற்பாட்டு ஆலோசனைகளை வெளியிடுவதும், உள்ளகச்

சுற்றறிக்கைகளை வெளியிடுவதும் திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகும். அதற்கமைய, 2025 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் 09 செயற்பாட்டு ஆலோசனைகளும் 19 உள்ளகச் சுற்றறிக்கைகளும் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 2.2. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிமங்களை வழங்குதல்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் ஒரு நிறுவனமாக, இத் திணைக்களத்தினால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்ட பொருட்களுக்கான உரிமங்களை வழங்குவது பிரதான பணியாகும். அதற்கமைய, அப் பணியை முறையானதாகவும் பயனுள்ளதாகவும் மேற்கொண்டு சேவைபெறுனர்களுக்குத் தரமான சேவையை வழங்குவதற்காக இத்திணைக்களத்தில் 5 பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளதுடன், இப்பிரிவுகளின் மூலம் உரிமங்கள் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது.

அதன்படி, 2025 ஆம் ஆண்டில் ஒவ்வொரு பிரிவினாலும் வழங்கப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு உரிமங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு அமைகின்றன.

### 2.2.1. அலகு 1 - ஔடதங்கள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள்

இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்குவதற்கு ஔடதங்கள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள் பிரதானமாக ஐந்து தொகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு தொகுதியின் கீழும் 2025 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட புதிய உரிம எண்ணிக்கைகள் கீழே உள்ளவாறாகும்.

| இலக்கம் | விபரங்கள் | குழு | உரிமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மேற்கத்தேய ஔடதங்கள் | 1000 | 1,359 |
| 2 | மிருக ஔடதங்கள் | 1010 | 436 |
| 3 | ஆயுர்வேத ஔடதங்கள் | 1020 | 120 |
| 4 | ஹோமியோபத்தி ஔடதங்கள் | 1030 | 10 |
| 5 | வைத்திய உபகரணங்கள் | 1100 | 106 |
| | **மொத்தம்** | | **2,031** |

#### ஔடதங்கள் மற்றும் வைத்திய உபகரணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமங்கள்

2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைச் சட்டத்தின் 109 ஆம் பிரிவிற்கமைய தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற அனுமதியின் கீழ், ஔடதங்கள் மற்றும் சிகிச்சை உபகரணங்களுக்கு இறக்குமதி உரிமங்களை வழங்குவதற்கு முன்னர் எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் சில மற்றும் இறக்குமதி உரிமங்களுக்கு உள்ளடக்க வேண்டிய விசேட நிபந்தனைகள் இப்

பிரிவினால் இனங்காணப்பட்டுள்ளது. மேலும், 2025 ஆம் ஆண்டிற்கான கூட்டு இறக்குமதி உரிமங்கள் பற்றி ஆய்வு செய்யப்பட்டதுடன், அதற்கமைய அவற்றை வழங்குவது தொடர்பான நிபந்தனைகள் மீளாய்வு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டன.

2024 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த உரிமங்களின் எண்ணிக்கையில் ஓரளவிலான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. முந்தைய ஆண்டை விட 2025 ஆம் ஆண்டில் மாதாந்த இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிமங்களின் எண்ணிக்கையில் ஓரளவிலான அதிகரிப்பு காணப்படுவதுடன், எமது நிறுவனத்திற்கு புதிய கணினி அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக, விரைவாக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இறக்குமதியாளர்கள் ஒரு உரிமத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் அளவைக் கட்டுப்படுத்தியமையால் அதிகளவிலான இறக்குமதி உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று, பொருளாதாரம் விரிவாக்கமடைந்தமையுடன் அதிகளவிலான மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டமையும் இந்த அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்துள்ளது.




### 2.2.2 அலகு 2 பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்கள்

இவ் அலகினால் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்கள் மற்றும் வேறு சில பொருட்களுக்கு உரிமங்கள் வழங்கப்படுவதோடு 2025 ஆம் ஆண்டிற்கு பின்வருமாறு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| | விபரம் | குழு | உரிமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | தூதரகங்களுக்கான வாகனங்கள் | 2030 | 01 |
| 2 | மின் மோட்டார் சைக்கிள்கள் | 2210 | 35 |
| 3 | நோயாளர் காவு வண்டி | 2130 | 03 |
| 4 | மோட்டார் சைக்கிள் | 2200 | 01 |
| 5 | துவிச்சக்கர வண்டி | 2220 | 13 |
| 6 | தலைக் கவசம் | 2240 | 21 |
| 7 | பொடி ஷெல் | 2320 | 09 |
| 8 | வாகன சட்டகம் (Chassis) | 2350 | 46 |
| 9 | ஆகாய விமானங்கள் மற்றும் ஹெலிகப்டர்களின் உதிரிப் பாகங்கள் | 2400 | 109 |
| 10 | ஆளில்லா விமானம் | 2410 | 45 |
| 11 | பலூன் | 2420 | 01 |
| 12 | பரசூட் | 2430 | 02 |
| 13 | கப்பல்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் | 2500 | 08 |
| **மொத்தம்** | | | **294** |

**பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள்**




## 2.2.3 அலகு 3 - இரசாயனங்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், தொழில்துறை மூலப்பொருட்கள் மற்றும் ஏற்றுமதிகள்

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனங்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் தொழில்துறை மூலப்பொருட்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| | விபரங்கள் | குழு | உரிமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | முன்னோடி இரசாயனப் பொருட்கள் | 3000 | 466 |
| 2 | விவசாய இரசாயனங்கள் தவிர்ந்த ஏனைய இரசாயனப் பொருட்கள், பூச்சிக்கொல்லிகள் | 3010 | 1665 |
| 3 | உரம் | 3020 | 11 |
| 4 | சேதனக் கழிவுகள் | 3030 | 233 |

| | | | |
|---|---|---|---|
| **5** | கதிரியக்க பொருட்கள் | 3040 | 108 |
| **6** | பெற்றோலியம் / பெற்றோலியம் சார்ந்த உற்பத்திகள் மற்றும் திரவ பெற்றோலிய வாயு | 3100 | 1282 |
| **7** | மது | 3200 | 193 |
| **8** | உலோகங்கள், உலோகத் துணிக்கைகள் ஏற்றுமதி | 3400 | 235 |
| **9** | உலோகங்கள், உலோகத் துணிக்கைகள் இறக்குமதி | 3500 | 30 |
| | **மொத்தம்** | | **4223** |

## இரசாயன பொருட்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் கைத்தொழில்துறை மூலப்பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதிகளுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள்



### 2.2.4 அலகு 4 - கையடக்க தொலைபேசிகள், தொலைத் தொடர்பு சாதனங்கள் மற்றும் பிற

**2025 ஆம் ஆண்டில் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் தொலைத் தொடர்பு உபகரணங்கள் மற்றும் பிற இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளுக்கு பின்வருமாறு இறக்குமதி உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.**

| | விபரங்கள் | குழு | உரிமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்கள் | 4000 | **53** |
| 2 | வெட்டப்பட்ட பலகை மற்றும் மரக் குற்றிகள் (ஏற்றுமதி) | 4010 | 99 |
| 3 | பயன்படுத்தப்பட்ட கணினிகள் | 4040 | 03 |
| 4 | பயன்படுத்தப்பட்ட குளிர்சாதனப் பெட்டிகள், யன்படுத்தப்பட்ட குளிரூட்டிகள் | 4050 | 01 |
| 5 | சூடாக்கும் பம்பி | 4060 | 09 |
| 6 | குளிரூட்டல் வாயுக்கள் | 4080 | 181 |
| 7 | புதிய குளிரூட்டி இயந்திரங்கள் | 4090 | 106 |
| 8 | மின் செருகிகள் மற்றும் கெவேனிகள் | 4100 | 45 |
| 9 | தூர இயக்கியின் மூலம் செயற்படுகின்ற விளையாட்டுப் பொருட்கள் | 4110 | 20 |
| 10 | சிகரெட் தாள்கள் | 4120 | 63 |
| 11 | பயன்படுத்தப்பட்ட வீட்டு உபகரணங்கள் | 4130 | 01 |
| 12 | வாள்கள் | 4140 | **113** |
| 13 | அச்சு இயந்திரங்கள் மற்றும் நகல் இயந்திரங்கள் | 4150 | **202** |
| 14 | விளையாட்டு உபகரணங்கள் மற்றும் அதிஷ்டத்தை சோதிக்கும் விளையாட்டு உபகரணங்கள் | 4170 | **09** |
| 15 | தொலைத்தொடர்பு உபகரணங்கள் | 4200 | **1182** |
| 16 | கையடக்கத் தொலைபேசி | 4300 | **2498** |
| 17 | பயன்படுத்தப்பட்ட ஆடைகள் | 4400 | **40** |
| | **மொத்தம்** | | **4625** |

**கையடக்கத் தொலைபேசிகள், தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் வேறு இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள்**




## 2.2.5 அலகு 5 – விலங்குகள், விலங்கு உற்பத்திகள் மற்றும் வேறு இறக்குமதிகள்

விலங்குகள், விலங்கு உற்பத்திகள் மற்றும் வேறு இறக்குமதிகளுக்கு கீழுள்ளவாறு உரிமங்கள் வழங்கப்பட்டன.

| | விபரங்கள் | குழு | உரிமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | உயிருள்ள விலங்குகள் | 5000 | 28 |
| 2 | உணவாகக் கொள்ளப்படும் இறைச்சி வகைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகள் | 5010 | 154 |
| 3 | விலங்குகளுக்கான உணவுகள் | 5020 | 2475 |
| 4 | உப்பு | 5100 | 40 |

| | | | |
|---|---|---|---|
| **5** | சீனி | 5110 | 13 |
| **6** | உறைவிக்கப்பட்ட மீன் | 5200 | 149 |
| **7** | மீன் தீவனம் | 5210 | 4 |
| **8** | டின்னில் அடைக்கப்பட்ட மீன் | 5220 | 12 |
| **9** | தோல் நீக்கப்படாத மரமுந்திரிகை | 5300 | 70 |
| **10** | தானிய வகைகள் | 5310 | 135 |
| **11** | அரிசி | 5320 | 21 |
| **12** | தவிடு கலந்த அரிசி | 5330 | 1 |
| **13** | பாம் எண்ணெய் | 5340 | 86 |
| **14** | சக்தியளிக்கும் பானங்கள் | 5400 | 39 |
| **15** | தேயிலை | 5410 | 748 |
| **16** | தங்கம் | 5500 | 30 |
| | **மொத்தம்** | | **4005** |

## விலங்குகள், விலங்கு உற்பத்திகள் மற்றும் வேறு இறக்குமதிகளுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள்



## 2.2.6 2025 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் - மாதாந்தம்

| மாதம் | அலகு 1 | அலகு 2 | அலகு 3 | அலகு 4 | அலகு 5 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| சனவரி | 202 | 10 | 246 | 399 | 177 | **1034** |
| பெப்ரவரி | 149 | 32 | 363 | 392 | 233 | **1169** |
| மார்ச் | 137 | 35 | 424 | 405 | 295 | **1296** |
| ஏப்ரல் | 149 | 27 | 340 | 328 | 303 | **1147** |
| மே | 136 | 15 | 303 | 335 | 323 | **1112** |
| யூன் | 188 | 20 | 317 | 403 | 379 | **1307** |
| யூலை | 195 | 17 | 436 | 418 | 391 | **1457** |
| ஆகஸ்ட் | 184 | 24 | 378 | 392 | 385 | **1363** |
| செப்டெம்பர் | 158 | 27 | 359 | 404 | 372 | **1320** |
| ஒக்டோபர் | 148 | 22 | 385 | 463 | 398 | **1416** |
| நவம்பர் | 168 | 31 | 379 | 328 | 353 | **1259** |
| டிசம்பர் | 217 | 34 | 293 | 358 | 396 | **1298** |
| மொத்தம் | **2031** | **294** | **4223** | **4625** | **4005** | **15178** |



### 2.2.7 கடந்த 4 ஆண்டுகளில் வழங்கப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள்

| | பொருட்கள் | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
|---|---|---|---|---|---|---|
| அலகு 01 | ஔடதங்கள் | 2,255 | 1,832 | 1,945 | 1,583 | 2031 |
| அலகு 02 | வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் | 284 | 647 | 385 | 640 | 294 |
| அலகு 03 | இரசாயனப் பொருட்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், கைத்தொழில்துறை மூலப்பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகள் | 4,313 | 3,653 | 4,256 | 4,881 | 4223 |
| அலகு 04 | கைத்தொலைபேசிகள், தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் ஏனையவை | 8,982 | 4,231 | 5,218 | 6,136 | 4625 |
| அலகு 05 | விலங்குகள், விலங்கு உற்பத்திகள் மற்றும் வேறு இறக்குமதிகள் | 3,742 | 3,443 | 3,282 | 3,770 | 4005 |
| **மொத்தம்** | | **19,576** | **13,806** | **15,086** | **170,10** | **15,178** |

## 2.3 கடந்த 3 வருடங்களில் வழங்கப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் தொடர்பான தரவு மதிப்பாய்வு

### 2.3.1 ஔடதங்கள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள் - அலகு 1

| | விபரம் | வருடம் | | |
|---|---|---|---|---|
| | | 2023 | 2024 | 2025 |
| 01 | மேற்கத்தேய ஔடதங்கள் | 1365 | 914 | 1,359 |
| 02 | மிருக ஔடதங்கள் | 309 | 404 | 436 |
| 03 | ஆயுர்வேத ஔடதங்கள் | 179 | 175 | 120 |
| 04 | ஹோமியோபத்தி ஔடதங்கள் | 14 | 10 | 10 |
| 05 | வைத்திய உபகரணங்கள் | 78 | 80 | 106 |
| **மொத்தம்** | | **1945** | **1583** | **2031** |

நிதிப் புழக்க அதிகரிப்பு மற்றும் நாணய மாற்று விகிதம் தொடர்ந்து வலுவடைந்துள்ளமை காரணமாக, 2024 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டில் புதிய உரிமங்கள் வழங்கப்படுவது சற்று அதிகரித்துள்ளது. கால்நடை மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், மேற்கத்திய மருந்துகள் மற்றும் ஹோமியோபதி மருந்துகள் ஆகிய பிரிவுகளைத் தவிர, ஆயுர்வேத மருந்துகளுக்காக வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சியடையும் போக்கு காணப்படுகிறது.

2022 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட புதிய உரிமங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும், 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட புதிய உரிமங்கள் சற்றே வீழ்ச்சியடையும் போக்கைக் காட்டியுள்ளன. எனினும், மீண்டும் 2025 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட புதிய உரிமங்களின் எண்ணிக்கை அதிகரித்தமையுடன் இது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளதாகக் தெரிகிறது.

2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கையை விட (1583), 2025 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை (2031) ஏறத்தாழ 28% அதிகரிப்பைக் காட்டியுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நிகழநிலை அமைப்பு (Stratlink) மூலம் வினைத்திறனாகவும் தாமதமின்றியும் உரிமங்களை வழங்கியமையும், பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் இதற்குக் காரணமாக அமைந்துள்ளன.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, இறக்குமதியின் போது விதிக்கப்பட்டிருந்த பல்வேறு கட்டுப்பாட்டு நிபந்தனைகள் தளர்த்தப்பட்டமை மற்றும் வெளிநாட்டு கையிருப்பின் வளர்ச்சி ஆகியவற்றின் காரணமாக, மீண்டும் மருந்து நிறுவனங்கள் நாட்டின் மருந்துத் தேவையை தட்டுப்பாடின்றி நிவர்த்தி செய்ய முற்பட்டுள்ளமை புலனாகிறது.

## 2.3.2 பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் வாகன பாகங்கள் - அலகு 2

| இலக்கம் | விபரம் | வருடம் | | |
|---|---|---|---|---|
| | | 2023 | 2024 | 2025 |
| 01 | தூதரகங்களுக்கான வாகனங்கள் | - | - | 01 |
| 02 | வெளிநாட்டு சேவை நிறுவனங்களுக்கான அன்பளிப்பு | 02 | 06 | - |
| 03 | சமூக சேவை நிறுவனங்களுக்கான அன்பளிப்பு | 07 | 09 | - |
| 04 | விசேட தேவைகளுக்கான வாகனங்கள் | - | 01 | - |
| 05 | மோட்டார் ட்ரேலர் (பயன்படுத்தப்பட்ட) | 02 | - | - |
| 06 | விவசாயத் துறைக்கான பயன்படுத்தப்பட்ட டிரக்டர் | 02 | 01 | - |
| 07 | ஆகாய விமானங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் | 96 | 187 | 109 |
| 08 | என்ஜின் | 03 | 02 | - |
| 09 | இயந்திரங்கள்ள மற்றும் உதிரிப் பாகங்கள் | 05 | 02 | - |
| 10 | பொடி ஷெல் | 25 | 38 | 09 |
| 11 | பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் | 01 | 02 | 01 |
| 12 | மின்சார மோட்டார் சைக்கிள் | 138 | 154 | 35 |
| 13 | துவிச்சக்கர வண்டி | 18 | 13 | 13 |
| 14 | தலைக் கவசம் | 21 | 30 | **21** |
| 15 | வாகன சட்டகம் | 59 | 168 | 46 |
| 16 | இருக்கைகள் (பயன்படுத்தப்பட்ட வாகன இருக்கைகள்) | 03 | 03 | - |
| 17 | பயன்படுத்தப்பட்ட ஆடைகள் | 03 | 24 | - |
| 18 | நோயாளர் காவு வண்டி | - | - | 03 |
| 19 | ஆளில்லா விமானம் | - | - | 45 |
| 20 | பலூன் | - | - | 01 |
| 21 | பரசூட் | - | - | 02 |
| 22 | கப்பல்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் | - | - | 08 |
| | **மொத்தம்** | **385** | **640** | **294** |

இத்திணைக்களத்தினால் மின்சார மோட்டார் சைக்கிள்களுக்கான இறக்குமதி உரிமங்களைப் பெற்றுக்கொள்ளும் தேவை 2025.04.29 ஆம் திகதிய 2434/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் நீக்கப்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டின் முதல் 04 மாத காலப்பகுதியில் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை 35 ஆகக் காணப்படுகிறது. அதற்கமைய, மின்சார மோட்டார் சைக்கிள்களுக்காக 2025 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கையில், 2024 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் சுமார் 77% வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து, உற்பத்தித் திகதியிலிருந்து 03 வருடக் காலத்திற்கு மேற்படாத வாகனங்களை எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டமையுடன், உள்நாட்டில் ஒன்றுகோர்க்கபபடும் வாகனங்களுக்காக (பொடி ஷெல்) பெறப்படும் இறக்குமதி உரிமங்களின் எண்ணிக்கையில், 2024 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் சுமார் 76% வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டிலிருந்து தொகுதி இலக்கம் 2350 (உள்நாட்டில் ஒன்றுகோர்க்கப்படும் மோட்டார் சைக்கிள்கள்) இன் கீழ் மேற்கொள்ளப்படும் இறக்குமதிகளுக்காக புரொபோர்மா விலைப்பட்டியல்கள் பலவற்றிற்கு உரிமமொன்றை விண்ணப்பிக்குமாறு இறக்குமதியாளர்களை அறிவூட்டியதன் காரணமாக 2024 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டில் அத் தொகுதியின் கீழ் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கையில் சுமார் 73% வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், குறித்த உரிமங்களின் எண்ணிக்கையில் 73% வீழ்ச்சி அவதானிக்கப்பட்ட போதிலும், அத் தொகுதியின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கையில் சுமார் 12% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்குவதற்காக வெளி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் பரிந்துரைகளை நிகழ்நிலை முறை ஊடாக மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிமங்களை வழங்கும் செயல்முறையை மிகவும் முறைப்படியாக மேற்கொள்வதற்கான திறன் மேம்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

### 2.3.3 இரசாயனப் பொருட்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் கைத்தொழில் மூலப் பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி - அலகு 3

| | விபரங்கள் | வருடம் | | |
|---|---|---|---|---|
| | | **2023** | **2024** | **2025** |
| 01 | முன்னோடி இரசாயனப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் | 508 | 508 | 466 |
| 02 | விவசாய இரசாயனங்கள் தவிர்ந்த ஏனைய இரசாயனப் பொருட்கள், பூச்சிக்கொல்லிகள் | 1743 | 1940 | 1665 |
| 03 | உரம் | - | - | 11 |
| 04 | சேதனக் கழிவுகள் | 46 | 99 | 233 |
| 05 | கதிரியக்க பொருட்கள் | 253 | 182 | 108 |
| 06 | பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் | 1075 | 1452 | 1282 |
| 07 | மது | 250 | 229 | 193 |
| 08 | பிளாஸ்டிக் உணவுப் பாத்திரங்கள் | - | 01 | - |
| 09 | உலோகங்கள், உலோகத் துணிக்கைகள் ஏற்றுமதி | 213 | 317 | 235 |
| 10 | உலோகங்கள், உலோகத் துணிக்கைகள் இறக்குமதி | 168 | 153 | 30 |
| | **மொத்தம்** | **4256** | **4881** | **4223** |

இறக்குமதி செய்யப்படுகின்ற முன்னோடி இரசாயன பொருட்கள், பெற்றோலியம் சார்ந்த உற்பத்திகள், கதிர்வீச்சுப் பொருட்கள், மதுசாரம் சார்ந்த மூலப் பொருட்கள், ஏனைய கைத்தொழிலிற்குத் தேவையான இரசாயனங்கள், வேறு மூலப் பொருட்களின் இறக்குமதிக்கான உரிமங்களை வழங்குதல் மற்றும் உலோகத் துணிக்கைகளை ஏற்றுமதி செய்வதற்கு உரிமங்கள் அலகு 3 இனால் வழங்கப்படுகின்றது.

உரிமங்கள் மற்றும் பற்றுக்கள் வழங்கும் செயல்முறைக்காக புதிய கணினி மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டமை மற்றும் அதற்கமைய எமது திணைக்களமும் இலங்கை சுங்கமும் பரஸ்பரம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டதன் காரணமாக, நிலவிய செயல்முறை முறைப்படுத்தப்படும் போக்கு அவதானிக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட சில உரிம தொகுதிகளுக்கு கூட்டு உரிமங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை மற்றும் ஒரு உரிமத்திற்காக பல புரொபோர்மா விலைப் பட்டியல்களை உள்ளடக்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டமை ஆகியவற்றின் காரணமாக, 2024 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கையில் ஓரளவிலான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது.

### 2.3.4 தொலைபேசி, தொலைத் தொடர்பு உபகரணங்கள் மற்றும் வேறு – அலகு 4

| | விபரம் | வருடம் | | |
|---|---|---|---|---|
| | | 2023 | 2024 | 2025 |
| 01 | வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்கள் | 153 | 207 | 53 |
| 02 | வெட்டப்பட்ட பலகை மற்றும் மரக் குற்றிகள் (ஏற்றுமதி) | 65 | 108 | 99 |
| 03 | பயன்படுத்தப்பட்ட கணினிகள் | 09 | 04 | 03 |
| 04 | பயன்படுத்தப்பட்ட குளிர்சாதனப் பெட்டிகள், பயன்படுத்தப்பட்ட குளிரூட்டிகள் | 01 | - | 01 |
| 05 | சூடாக்கும் பம்பி | 10 | 16 | 09 |
| 06 | குளிரூட்டல் வாயுக்கள் | 99 | 99 | 181 |
| 07 | புதிய குளிரூட்டி இயந்திரங்கள் | 228 | 167 | 106 |
| 08 | விளையாட்டு உபகரணங்கள் மற்றும் அதிஷ்டத்தை சோதிக்கும் விளையாட்டு உபகரணங்கள் | - | 07 | 09 |
| 09 | மின் செருகிகள் மற்றும் கெவேனிகள் | 65 | 79 | 45 |
| 10 | தூர இயக்கியின் மூலம் செயற்படுகின்ற விளையாட்டுப் பொருட்கள் | 74 | 91 | 20 |
| 11 | சிகரெட் தாள்கள் | 49 | 69 | 63 |
| 12 | பயன்படுத்தப்பட்ட வீட்டு உபகரணங்கள் | 03 | 01 | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | வாள்கள் | 17 | 102 | 113 |
| 14 | அச்சு இயந்திரங்கள் மற்றும் நகல் இயந்திரங்கள் | 142 | 210 | 202 |
| 15 | தொலைத்தொடர்பு உபகரணங்கள் | 1175 | 1205 | 1182 |
| 16 | கையடக்கத் தொலைபேசி | 3128 | 3770 | 2498 |
| 17 | வானிலை பலூன்கள் | - | 01 | - |
| 18 | பயன்படுத்தப்பட்ட ஆடைகள் | - | - | 40 |
| **மொத்தம்** | | **5218** | **6136** | **4625** |

தொலைபேசி, தொலைத் தொடர்பு உபகரணங்கள், இலத்திரனியல் உபகரணங்கள், வாள்கள், தூர இயக்கி விளையாட்டுப் பொருட்கள், வெடி மருந்துகள், காற்றுத் துப்பாக்கிகள் போன்ற பொருட்களுக்கு கட்டுப்பாட்டு உரிமங்கள் வழங்குதல் மற்றும் மரப் பலகைகளை ஏற்றுமதி செய்வதற்கு உரிமங்களை வழங்குதலும் இவ் அலகினால் மேற்கொள்ளப்படுகின்றது.

2025 ஆம் ஆண்டில் உரிமங்கள் மற்றும் பற்றுக்கள் வழங்கும் செயல்முறைக்காக புதிய கணினி மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டமை மற்றும் அதற்கமைய எமது திணைக்களமும் இலங்கை சுங்கமும் பரஸ்பரம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டதன் காரணமாக, நிலவிய செயல்முறை முறைப்படுத்தப்படும் போக்கு அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, 2024 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டில் 4300 ஆம் தொகுதி (கைத்தொலைபேசிகள் (பயன்படுத்தப்பட்ட / புதிய) கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றிற்காக புரொபோர்மா விலைப்பட்டியல்கள் பலவற்றை உள்ளிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டமை காரணமாக வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைவடைவதற்குக் காரணமாக அமைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

2025.02.04 திகதிய අමප/25/0070/826/001 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், சுற்றாடல் அமைச்சின் கோரிக்கையைக் கருத்திற் கொண்டு பயன்படுத்தப்பட்ட ஆடைகளின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்கு வருடாந்த ஒதுக்கீட்டு (கோட்டா) முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும், அம் முறையின் கீழ் மூன்று வருடங்களுக்குள் பயன்படுத்தப்பட்ட அனைத்து வகையான ஆடைகளினதும் (குளிர்கால ஆடைகள் உள்ளிட்ட) இறக்குமதியை படிப்படியாக நிறுத்துவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி, 2025 ஆம் ஆண்டிற்கான பயன்படுத்தப்பட்ட ஆடைகளின் இறக்குமதிக்காக 40 இறக்குமதி உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.3.5 விலங்குகள், விலங்கு உற்பத்திகள் மற்றும் வேறு இறக்குமதிகள் - அலகு 5

| | விபரம் | வருடம் | | |
|---|---|---|---|---|
| | | 2023 | 2024 | 2025 |
| 01 | உயிருள்ள விலங்குகள் | 1642 | 2222 | 28 |
| 02 | உணவாகக் கொள்ளப்படும் இறைச்சி வகைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகள் | - | - | 154 |
| 03 | விலங்குகளுக்கான உணவுகள் | - | - | 2475 |
| 04 | உப்பு | 26 | 27 | 40 |
| 05 | சீனி | 07 | 17 | 13 |
| 06 | உறைவிக்கப்பட்ட மீன் | 293 | 278 | 149 |
| 07 | உறைவிக்கப்பட்ட கனவாய் | - | 02 | - |
| 08 | மீன் தீவனம் | - | - | 04 |
| 09 | டின்னில் அடைக்கப்பட்ட மீன் | - | - | 12 |
| 10 | தோல் நீக்கப்படாத மரமுந்திரிகை | 01 | 36 | 70 |
| 11 | தானிய வகைகள் | 193 | 174 | 135 |
| 12 | அரிசி | 120 | 173 | 21 |
| 13 | தவிடு கலந்த அரிசி | - | - | 01 |
| 14 | பாம் எண்ணெய் | 54 | 61 | 86 |
| 15 | சக்தியளிக்கும் பானங்கள் | 51 | 55 | 39 |
| 16 | தேயிலை | 500 | 687 | 748 |
| 17 | தங்கம் | 37 | 37 | 30 |
| 18 | ஆடைகள் | - | 01 | - |
| 19 | தயாரிக்கப்பட்ட மோல்ட் | 358 | - | - |
| **மொத்தம்** | | **3282** | **3770** | **4005** |

2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2025 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள மொத்த உரிமங்களின் எண்ணிக்கையானது அதிகரித்த பெறுமானமொன்றைக் காட்டுவதுடன் தொகுதியாகப் பார்க்கும் போது சில தொகுதிகளில் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைந்த பெறுமானத்தைக் காட்டுகின்றது.

අමප/25/0406/808/027 ஆம் இலக்க மற்றும் 2025.03.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் 2025 யூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 300,000 மெட்ரிக் தொன் சோளத்தை கால்நடை உணவு உற்பத்திக்காக இறக்குமதி உரிமங்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்காக தொகுதி இலக்கம் 5020 இன் கீழ் 2475 இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த உரிமங்களின் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் உயர்வான மட்டத்தைக் காட்டியுள்ளது.

அமைச்சரவைத் தீர்மானத்தின் படி உள்நாட்டு நுகர்வுக்காக 5,000 மெட்ரிக் தொன் தோல் நீக்கப்பட்ட மரமுந்திரியை இறக்குமதி செய்வதற்கான உரிமங்களை வழங்குவதற்கு அனுமதி

வழங்கப்பட்டுள்ளதால், இதற்காக வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் உயர்வான மட்டத்தைக் காட்டியுள்ளது.

தொகுதி இலக்கம் 580 இன் கீழ் தேயிலை இறக்குமதிக்காக வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டில் 687 ஆகவும், 2025 ஆம் ஆண்டில் 748 ஆகவும் காணப்படுவதுடன், இத் தொகுதிக்குள் அது ஒரு ஒப்பீட்டளவிளான வளர்ச்சியைக் காட்டியுள்ளது.

தொகுதி இலக்கம் 505 இன் கீழ் உப்பு இறக்குமதிக்காக வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டில் 27 ஆகவும், 2025 ஆம் ஆண்டில் 40 ஆகவும் காணப்படுவதுடன், இத் தொகுதிக்குள் அது ஒரு ஒப்பீட்டளவிலான வளர்ச்சியைக் காட்டியுள்ளது.

2024 ஆம் ஆண்டில் தொகுதி இலக்கம் 515 இன் கீழ் சீனிக்கு 17 இறக்குமதி உரிமங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2025 ஆம் ஆண்டில் தொகுதி இலக்கம் 5110 இன் கீழ் அது 13 ஆகக் காணப்படுவதுடன், இது 2024 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் குறைவான மட்டமாகும்.

அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் உள்நாட்டு நுகர்வுக்காக அரிசி இறக்குமதி உரிமங்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2025 ஆம் ஆண்டில் Sticky rice மாத்திரமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளதால், 2024 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் இது குறைவான மட்டத்தைக் காட்டியுள்ளது.

## 2.4 இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கொடுப்பனவு முறைகள் மற்றும் கட்டளைகள்

வர்த்தக நோக்கில் மேற்கொள்ளப்படுகின்ற சர்வதேச வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குமுறைப்படுத்துதல்களும் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்காக வெளிநாட்டுக் கொடுப்பனவு முறைகள் 1739/03 ஆம் இலக்க மற்றும் 2012.01.02 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளதுடன், அக் கொடுப்பனவு முறைகள் கீழே உள்ளவாறாகும். மேலும், இக் கொடுப்பனவு முறைகள் சம்பந்தமாக வணிக வங்கிகளுக்கு செயற்பாட்டு ஆலோசனைகள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன.

1. முற்கொடுப்பனவு (**Advanced Payments - AP)**
2. ஆவணங்களுக்கு எதிரான ஏற்பு (**Documents against Acceptance - DA)**
3. கடன் கடிதம் (**Letters of Credit - LC)**
4. ஆவணங்களுக்கு எதிரான கொடுப்பனவு (**Documents against Payment - DP)**
5. திறந்த கணக்கு (**Open Accounts - OA)**
6. பொருட்களை விற்பனை செய்த பின்னர் பணம் செலுத்தும் முறை (**Payments on Consignment Account Basis)**
7. அந்நிய செலாவணி செலவிடப்படாத முறையின் கீழ் (**Non Foreign Exchange - NFE)**

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் 2025 ஆம் ஆண்டிற்குள் கொடுப்பனவு முறைகள் சம்பந்தமாக **1739/03** ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைவான அனுமதிகள் / ஆட்சேபனையின்மைக் கடிதங்கள் பின்வருமாறு அமைகின்றன.

| 2025 ஆம் ஆண்டில் அலகு 02 மூலம் வழங்கப்பட்ட அனுமதிகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மாதம்** | முற்கொடுப்பனவு (அ.டொ 50000 இற்கு மேல்) | ஆவணங்களுக்கு எதிரான ஏற்பிற்கான கொடுப்பனவு | திறந்த கணக்கு அடிப்படையிலான கொடுப்பனவு | மீள் ஏற்றுமதி | முற்பணக் கொடுப்பனவின் அடிப்படையில் வழங்கப்படும் அனுமதிகள் | வேறு | மொத்தம் |
| சனவரி | 01 | 23 | 14 | 07 | 12 | 05 | **62** |
| பெப்ரவரி | 04 | 30 | 24 | 05 | 10 | 02 | **75** |
| மார்ச் | 09 | 39 | 30 | 03 | 09 | 05 | **95** |
| ஏப்ரல் | 04 | 32 | 29 | 02 | 02 | 02 | **71** |
| மே | 01 | 20 | 21 | 02 | 05 | 02 | **51** |
| யூன் | 03 | 30 | 21 | 03 | 16 | 04 | **77** |
| யூலை | 02 | 47 | 19 | 11 | 13 | 00 | **92** |
| ஆகஸ்ட் | 01 | 40 | 18 | 01 | 16 | 02 | **78** |
| செப்டெம்பர் | 04 | 44 | 25 | 01 | 06 | 03 | **83** |
| ஒக்டோபர் | 10 | 63 | 31 | 01 | 15 | 04 | **124** |
| நவம்பர் | 04 | 61 | 32 | 02 | 11 | 01 | **111** |
| டிசம்பர் | 07 | 45 | 22 | 02 | 22 | 06 | **104** |
| மொத்தம் | **50** | **474** | **286** | **40** | **137** | **36** | **1023** |

## 2.5. இலங்கையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் வசதியளித்தல்

### 2.5.1 ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 1540 ஆம் இலக்க முன்மொழிவை இலங்கையில் நடைமுறைப்படுத்துதல்

அணு ஆயுதங்கள், இரசாயன ஆயுதங்கள் மற்றும் உயிரியல் ஆயுதங்கள் அத்துடன் அவற்றை எடுத்துச் செல்லப் பயன்படுத்தக்கூடிய இலக்கிடப்பட்ட முறைகள் (delivery systems) பரவுதலானது சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் கடும் அச்சுறுத்தலாகக் கருதப்படுகிறது. எனவே, அத்தகைய ஆயுதங்களை அல்லது அவற்றுடன் தொடர்புடைய பொருட்களை அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் (non-state actors) பெற்றுக்கொள்வதற்கோ, தம்வசம் வைத்திருப்பதற்கோ, கைமாற்றுவதற்கோ, போக்குவரத்துச் செய்வதற்கோ அல்லது பயன்படுத்துவதற்கோ எந்தவொரு வகையிலும் ஆதரவளிக்காமல் இருப்பது அரசுகளின் அடிப்படைப் பொறுப்பாகும்.

அதற்காக அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் 1540 முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான சட்டரீதியான மற்றும் நிர்வாக ரீதியான ஏற்பாடுகளை விதிப்பது அத்தியவசியாகும். இம் முன்மொழிவின் கீழ் அணு, இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்கள் மற்றும் அவை சார்ந்த பொருட்களை அமைதி நோக்கிற்காக மாத்திரம் ஏற்றுமதி, மீள் ஏற்றுமதி, இடமாற்றம் செய்தல் (Transit) மற்றும் கப்பல் மாற்றம் செய்தல் (Trans-Shipment) ஆகியவற்றுக்குரிய சட்டங்களுக்கமைய நடைபெற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இத் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமானவாறு விசேட சட்டக் கட்டமைப்பொன்று இந்நாட்டில் இல்லாதிருந்தமையினால், இலங்கை மூலோபாயப் பொருட்களின் வர்த்தகக் கட்டுப்பாட்டிற்கு முறையான, பரஸ்பரம் இணைக்கப்பட்ட மற்றும் நவீன சட்டக் கட்டமைப்பொன்றை நிறுவுவது அவசியமானது என இனம் காணப்பட்டுள்ளது.

இத்தகைய சர்வதேசப் பொறுப்புக்களை நடைமுறைப்படுத்துவதானது இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை, பொறுப்புக்கூறல் மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை மேலும் வலுப்படுத்துவதுடன், தேசிய பாதுகாப்பு, வர்த்தக ஸ்திரத்தன்மை, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் வணிக வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல நன்மைகளை நாட்டிற்கு வழங்குவதற்கும் பங்களிப்புச் செய்கிறது.

மேற்குறிப்பிட்ட தேவைகளைக் கருத்திற்கொண்டு, 1540 ஆம் இலக்க முன்மொழிவை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்காக 2019 செப்டம்பர் 11 ஆம் திகதி அமைச்சரவையின் கொள்கை ரீதியான இணக்கப்பாடு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், இத்தீர்மானத்தை பயனுள்ள முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும், தேவையான சட்ட மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதற்கும், அரச நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சட்ட வரைவுக் குழுவொன்றும் தொழில்நுட்பக் குழுவொன்றும் அமைச்சரவை அனுமதியுடன் நியமிக்கப்பட்டன.

தொழில்நுட்பக் குழுவினால் சர்வதேச அனுபவங்களைக் (international best practices) கருத்திற்கொண்டு, ஐரோப்பிய ஒன்றிய இராணுவ உபகரணங்களின் பட்டியல் (EU Military List) மற்றும் ஐரோப்பிய ஒன்றிய இரட்டைப் பயன்பாட்டு கட்டுப்பாட்டுப் பட்டியல் (EU Dual-Use Control List) ஆகியவற்றை ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தயாரிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தேசிய கட்டுப்பாட்டுப் பட்டியலொன்றைத் தயாரிப்பதற்கான அடிப்படை ஆதாரமாக இந்த இரு பட்டியல்களையும் பயன்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

எனினும், இச் செயன்முறைக்குரிய முதல் அமைச்சரவை அனுமதி 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தமையினால், அதனை புதுப்பித்தல் மற்றும் தற்போதைய கொள்கைச் சூழலுக்கு

இணங்கச் செய்வதும் அவசியமானது என சட்ட வரைஞர் கண்காணித்துள்ளார். அதற்கமைய தயாரிக்கப்பட்ட புதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான அனுமதி 2023 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் 1540 ஆம் முன்மொழிவை முழுமையாகவும் பயனுள்ள முறையிலும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்டப் பின்னணியை வழங்குவதற்காக மூலோபாய வர்த்தக முகாமைத்துவச் சட்டம் (Strategic Trade Management Act) வரைவு செய்யப்பட்டு சட்ட வரைஞருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இச் சட்ட வரைவைத் தயாரிக்கும் போது, 1540 ஆம் முன்மொழிவு தொடர்பான துறைசார் நிபுணர்களின் கண்காணிப்புகள், ஆசிய-பசிபிக் பிராந்திய நாடுகளில் நடைமுறையிலுள்ள மூலோபாய வர்த்தகக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் மற்றும் சர்வதேச வழிகாட்டல்கள் ஆகியன விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

தற்போது, சட்ட வரைஞரின் கண்காணிப்புக்களுக்கு ஏற்ப தேவையான திருத்தங்களை மேற்கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இச் சட்டத்தை நிறைவேற்றுவதானது இலங்கையின் மூலோபாய வர்த்தகக் கட்டுப்பாட்டு அமைப்பை ஒரு முழுமையான மற்றும் வினைத்திறனான கட்டமைப்பிற்கு உயர்த்துவதற்கான ஒரு முக்கிய படியாக அமையும்.

### 2.5.2 ஏற்றுமதிக்கு முன்னைய சோதனைச் சான்றிதழ் (Pre-Shipment Inspection Certificate)

பயன்படுத்தப்பட்ட வாகனங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்யும் போது, அவ் வாகனங்களுக்கு உரிய வாயு உமிழ்வுகளின் தரநிலைகள் மற்றும் பாதுகாப்பு அலகுகள் தர நிலைகளுக்கு உட்பட்டதா என சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியதால், அதற்காக ஏற்றுமதிக்கு முன்னைய சோதனைச் சான்றிதழை பெற வேண்டிய அதிகாரமளிக்கப்பட் நிறுவனங்கள் எவை என்பதனை உள்ளடக்கி 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதிய 1804/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானிப் அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டது.

2020 ஆம் ஆண்டிலிருந்து வாகன இறக்குமதி, கொவிட்-19 உலகளாவிய தொற்று நோய் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுடன், இதன் காரணமாக வாகனங்களுக்கான ஏற்றுமதிக்கு முன்னைய சோதனைச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் பெற்ற சோதனை நிறுவனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமை படிப்படியாக மீட்சி நிலையை அடைந்ததுடன், வாகன இறக்குமதி இறக்குமதி தொடர்பாக அரசு கவனம் செலுத்தி, சில சில வாகனத் தொகுதிகளை இறக்குமதி செய்வதற்கு காணப்பட்ட தற்காலிகத் தடையை நீக்கியதுடன், ஏற்றுமதிக்கு முன்னைய சோதனைச் சான்றிதழை வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான செயற்பாட்டை மீண்டும் ஆரம்பித்து, 2019 இல் விசேட தொழில்நுட்பக் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களினால் மீண்டும் முன்மொழிவுகளைப் பெற்று, பின்னர் பொருத்தமான நிறுவனங்களைத் தெரிவு செய்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைளை எடுத்தது.

2025 ஆம் ஆண்டின் முதற் காலாண்டிற்குள் அந் நிறுவனங்களைத் தெரிவு செய்யும் செயன்முறை பூர்த்தி செய்யப்பட்டதுடன், அதற்கமைய தெரிவு செய்யப்பட்டுள்ள

நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்காகப் பொருத்தமான ஒப்பந்தமொன்றைத் தயாரிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர், ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனங்களைப் பகிரங்கப்படுத்துவதற்காக வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்படவுள்ளது. இதன் மூலம், எதிர்காலத்தில் இறக்குமதியாளர்கள் வாகனங்களை இறக்குமதி செய்யும் போது எதிர்நோக்கும் சிரமங்களைக் குறைத்துக் கொள்வதற்கும், அவற்றை கொள்வனவு செய்யும் நுகர்வோரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் வழிவகுக்கும்.

### 2.5.3 இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை மீறும் இறக்குமதியாளர்களின் கருப்புப் பட்டியலை வெளியிடுவதற்கான வர்த்தமானி அறிவித்தல்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ள தரநிலைகளுக்கு இணங்காத இறக்குமதிகளை மேற்கொள்ளும் இறக்குமதியாளர்களின் பட்டியலைப் வெளியிடுவது, தேசிய பொருளாதாரம், பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அத்துடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்யும் சமூகப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கான ஒரு குறியீடாகும். எனவே, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ள தரநிலைகளுக்கு இணங்காத இறக்குமதிகளை மேற்கொள்ளும் இறக்குமதியாளர்களின் பட்டியலைப் வெளியிடுவது தொடர்பான ஏற்பாடுகள் இதன் கீழ் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, சட்ட வரைஞரினால் தயாரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் வரைவு, MF/IED/003/CM/2025/063 ஆம் இலக்க மற்றும் 2025.06.15 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் மூலம் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, அக்குறிப்பிட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் சம்பந்தமாக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரினால் வழங்கப்பட்டிருந்த கண்காணிப்புகளையும் கருத்திற்கொண்டு, அமைச்சரவையின் முன் அனுமதியின் கீழ் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் අමප/25/1108/804/131 ஆம் இலக்க மற்றும் 2025.07.22 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது.

அவ் அமைச்சரவைத் தீர்மானத்திற்கு படி, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரின் கண்காணிப்புகளையும் கருத்திற்கொண்டு, உரிய வர்த்தமானி அறிவித்தலை மீண்டும் தயாரிப்பதற்காக சட்ட வரைஞருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், சட்ட வரைஞரினால் வர்த்தமானி அறிவித்தல் திருத்தம் செய்யப்பட்ட பின்னர், மீண்டும் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக் கொண்டு வர்த்தமானியை வெளியிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

### 2.5.4 இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிமங்களை வழங்குவதற்கான கொள்கை ரீதியான கட்டமைப்பைத் தயாரித்தல் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிம நிபந்தனைகளை மீளாய்வு செய்தல்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் உரிமங்களுக்காக, பரிந்துரைகளை வழங்கும் நிறுவனங்களைத் சரியாக அடையாளம் காண்பதும், அந்த நிறுவனங்களுக்குரிய பொருட்களைச் சரியாகக் கண்டறிவதும், அதன் மூலம் குறித்த பொருட்களை இறக்குமதி செய்வதற்காக அந்தந்த நிறுவனங்களினாலேயே தெளிவான பரிந்துரைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டும் மேற்கூறப்பட்ட கொள்கைக் கட்டமைப்புத் தயாரிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன் முதற்கட்டமாக, உரிய இறக்குமதி உரிமங்களை வழங்கும் அலகுகளின் மூலம், ஒவ்வொரு உரிமப் பொருட்களுக்காகவும் வழமையாக பரிந்துரைகளை வழங்கி வரும் நிறுவனங்கள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டதுடன், அந்த நிறுவனங்கள் தொடர்பான சிக்கலான நிலைமைகளைக் கண்டறிவதற்கும், அச்சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் அந்தந்தப் பரிந்துரை வழங்கும் நிறுவனங்கள் இத்திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. அதற்கமைய, அந்த நிறுவனங்கள் மூலம் மாத்திரமே இறக்குமதி உரிமங்களுக்கான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் புதியதொரு செயன்முறை தயாரிக்கப்பட்டது.

அதன்படி, குறித்த பரிந்துரை வழங்கும் செயன்முறையை மேலும் முறைப்படுத்துவதற்காக இத்திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள STRATLINK டிஜிட்டல் அமைப்பின் ஊடாக நிகழ்நிலையில் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக, உரிய பரிந்துரை வழங்கும் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதற்கு இத்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## 2.6 புதிய மேம்படுத்தல்கள்

### 2.6.1 இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் STRATLINK கணனி மென்பொருள் அமைப்பின் முன்னேற்றம்




2022 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் அரச நிறுவனங்களுக்கான தகவல் மற்றும் சைபர் பாதுகாப்பு கொள்கை ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பரிந்துரைகளைக் கருத்திற் கொள்ளும்போது, STRATLINK கட்டமைப்பின் தரவுகளை அணுகும் தரப்பினருடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்வது அத்தியாவசியமான ஒரு விடயம் என மேலும் கண்டறியப்பட்டதுடன், அதற்கமைய STRATLINK கட்டமைப்போடு இணையும் தரப்பினரான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்கும்போது பரிந்துரைகளை வழங்கும் 25 அரச நிறுவனங்களுடன் அவர்களின் பொறுப்புகள் மற்றும் பங்களிப்புகள் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் (Memorandum of Understanding – MOU) செய்துகொள்ளும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

தற்போது இத்திணைக்களத்துடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வழக்கமான வாடிக்கையாளர்களில் 99% சதவீதமானோர் 2025 ஆம் ஆண்டளவில் STRATLINK கட்டமைப்பில் தங்களது பதிவுகளைப் பூர்த்தி செய்து, தத்தமது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிமங்களை நிகழ்நிலை ஊடாக மிகவும் எளிதாகப் பெற்று வருகின்றனர்.

அத்துடன், உரிமக் கட்டணங்கள் மற்றும் மேலதிகக் கட்டணங்களை அரச கொடுப்பனவு தளமான (Lanka Pay Payment Platform) ஊடாக மிகவும் விரைவாகச் செலுத்துவதற்கான வசதி வாடிக்கையாளர்களுக்குக் கிடைத்துள்ளதுடன், 24 x 7 கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான வசதிகளும் தற்போது ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் மற்றும் இலங்கை சுங்கம் ஆகியவற்றுக்கு இடையிலான அமைப்பு ஒருங்கிணைப்பு தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இலங்கை சுங்கத்தின் “ASYCUDA“ அமைப்புடன் STRATLINK அமைப்பின் உரிமத் தகவல்கள் தானியங்கி முறையில் பரிமாற்றப்படுகின்றன. அதற்கமைய, உரிமத் தகவல்கள் இலங்கை சுங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதுடன், உரிமப் பற்றுவைப்புக்கு அவசியமான சுங்க வெளிப்படுத்துகைத் (Customs Declarations) தகவல்கள் ASYCUDA அமைப்பிலிருந்து STRATLINK அமைப்பிற்குப் பெறப்பட்ட பின்னர், விடுவிப்பிற்கான அனுமதிகள் STRATLINK அமைப்பின் மூலம் இலங்கை சுங்கத்திற்குத் தானியங்கி முறையில் அனுப்பி வைக்கப்படுகின்றன.

### 2.6.2. STRATLINK அமைப்பின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள்

STRATLINK இன் முதற்கட்டத்தின் போது அடையாளம் காணப்பட்ட கட்டமைப்பின் மேம்படுத்தல்களை மேற்கொள்வதற்கு 2026 ஆம் ஆண்டில் அதன் இரண்டாம் கட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தேசிய ஒற்றைச் சாளரத் திட்டத்துடன் (National Single Window) இணைவதற்குக் மேலதிகமாக, தேசிய சைபர் பாதுகாப்பு செயல்பாட்டு மையத்துடன் (NCSOC - National Cyber Security Operation Centre) இணைவதன் மூலம், சைபர் அச்சுறுத்தல்களினால் அமைப்புக்கு ஏற்படக்கூடிய தாக்கங்களைக் குறைத்து, வினைத்திறனான மற்றும் தரமான சேவையொன்றை வழங்குவதற்குக் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

# 3 அத்தியாயம் -

## 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான நிதி ஆண்டிற்கான செயலாற்றுகைக் கூறறு

### 3.1. நிதி செயலாற்றுகை வெளிப்படுத்துகை

ஏசீஏ- எப்

**2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025 | | குறிப்பு | உண்மை நிலை 2025 | உண்மை நிலை 2024 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | 4,154,003,841 | 3,762,583,369 | |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| 3,315,000,000 | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | 4,154,003,841 | 3,762,583,369 | |
| 3,315,000,000 | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | 4,154,003,841 | 3,762,583,369 | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 164,186,000 | 128,344,250 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 579,458 | 488,608 | ஏசீஏ-4 |
| 5,000,000 | முற்பணக் கணக்குகள் | | 8,569,220 | 6,338,278 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | 102,951,541 | 19,880,000 | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | 276,286,219 | 155,051,136 | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **4,430,290,060** | 3,917,634,505 | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | **4,111,797,087** | 3,763,676,594 | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **318,492,973** | 153,957,911 | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | |
| 97,000,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 93,492,622 | 76,542,418 | |
| 88,345,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 68,249,014 | 53,042,340 | ஏசீஏ-2(ii) |
| 1,200,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 725,802 | 814,457 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | |
| 186,545,000 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **162,467,438** | 130,399,215 | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 3,755,000 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 1,685,969 | 1,380,382 | |
| 105,452,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 104,725,889 | 20,350,483 | |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | |
| 2,200,000 | திறன் விருத்தி | 14 | 1,111,326 | 602,588 | |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | - | |
| 111,407,000 | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **107,523,184** | 22,333,453 | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | **1,993,310** | 338,265 | ஏசீஏ-4 |
| 8,000,000 | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | **10,220,448** | 7,913,434 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **12,213,758** | 8,251,699 | |
| | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | 282,204,379 | 160,984,367 | |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | 36,288,593 | (7,026,456) | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி** | | 36,288,593 | (7,026,456) | ஏசீஏ-7 |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | - | - | ஏசீஏ-3 |

# 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு நிதி நிலை கூற்று

## 3. 2 நிதி நிலை நிதி நிலை கூற்று

ஏசீஏ -பீ

**2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | 2024 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 188,149,874 | 83,327,235 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 18,631,403 | 16,880,175 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **206,781,277** | **100,207,410** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 18,487,839 | 15,422,759 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 188,149,874 | 83,327,235 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | 100,000 | - |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 43,564 | 1,457,416 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **206,781,277** | **100,207,410** |

பக்க இலக்கம் 7முதல் 39 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 40 முதல் 50 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். **2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலைமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| ……………… | ……………… | ……………… |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பெயர்: | பெயர்: | பெயர் : |
| பதவி : | பதவி : | |
| திகதி :2026.02 .20 | திகதி : 2026.02 . 20 | திகதி : 2026.02. 20 |

Dr. Harshana Suriyapperuma
Secretary to the Treasury and Secretary to the Ministry of Finance, Planning and Economic Development
Ministry of Finance
Colombo 01

ඩී.ඩී. උපුල්මලී ප්‍රේමතිලක
ආනයන හා අපනයන පාලන ජනරාල්
ආනයන හා අපනයන පාලන දෙපාර්තමේන්තුව
කොළඹ 01

එච්.ඒ.සී.පී. ධර්මරත්න
ප්‍රධාන ගණකාධිකාරී
ආනයන හා අපනයන පාලන දෙපාර්තමේන්තුව
කොළඹ 01.

2

## 3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

## 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

**2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | உண்மை | |
|---|---|---|
| | **2025**<br>ரூபா | **2024**<br>ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | 4,111,739,694 | 3,762,583,369 |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 647,701 | 19,880,000 |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 6,101,628 | 4,158,551 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 164,186,000 | 128,344,250 |
| முற்பணங்களை அறவிடல் | 8,080,618 | 7,474,212 |
| வைப்புக்களின் பெறுகை | 579,458 | 488,608 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **4,291,335,099** | **3,922,928,990** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 161,741,636 | 127,853,087 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 725,802 | 814,457 |
| *மூலதனச் சொத்துகளின் புனரமைப்புஇ மூலதன மாற்றங்கள்இ திறன் வளர்ப்பு மற்றும் பிற மூலதனச் செலவினங்கள்* | 2,797,295 | - |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 285,173 | - |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 4,111,797,087 | 3,763,676,594 |
| முற்பணக் கொடுப்பனவு | 10,220,448 | 7,913,434 |
| வைப்புக் கொடுப்பனவு | 1,993,310 | 338,265 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **4,289,560,751** | **3,900,595,837** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **1,774,348** | **22,333,153** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| *மூலதனச் சொத்துகளின் நிர்மாணம், கொள்முதல் மற்றும் இதர முதலீட்டு பெறுதல்கள்* | 104,725,888 | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **104,725,888** | |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(104,725,888)** | |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | **(102,951,540)** | **22,333,153** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளுர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | 102,951,541 | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **102,951,541** | - |
| ***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | **102,951,541** | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ)** | - | - |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | - | - |

3

### 3.4 வருமானங்களை ஒன்று சேர்ப்பதற்கான செயலாற்றுகை அறிக்கை

**,000 ரூபா**

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | ஒன்று சேர்க்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா.) | இறுதி வருமான மதிப்பீடுகள் % ஆக |
| 1001.03.00 | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிம கட்டணம் | 3,800,000 | 3,315,000 | 4,154,004 | 125% |

### 3.4.1 கடந்த 4 வருடங்களுக்கான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிம மற்றும் மேலதிகக் கட்டணங்களின் பெறுமதி

**ரூபா. ‘000**

| வருடம் | 2022 | 2023 | 2024 | 2025 |
|---|---|---|---|---|
| தேறிய வருமானம் | 3,086,778 | 3,304,992 | 3,762,583 | 4,154,004 |



திணைக்களத்தினது கடந்த 3 ஆண்டுகளில் உரிமக் கட்டண வருமானத்தை கருத்தில் கொள்ளும் போது படிப்படியான வளர்ச்சியைக் காண முடிகின்றது. 2025 ஆம் ஆண்டில் உரிமங்களை வழங்குவதன் மூலம் 4.15 பில்லியன் ரூபாய்கள் என்ற உயர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன், அது 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.4% வீதமான வளர்ச்சியாகும்.

பொருளாதாரம் விரிவாக்கமடைந்தமை, புதிய கணினி அமைப்பின் வினைத்திறன் அதிகரித்ததன் காரணமாக வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை அதிகரித்தமை மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை மீறிய சந்தர்ப்பங்களில் அபராதத் தொகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தமை போன்ற காரணிகள் உரிம வருமானம் அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளன.

### 3.5 2025 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தியதன் செயலாற்றுகை

ரூபா. ‘000

| ஒதுக்கீட்டின் வகை | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் | | உண்மையான செலவு | பயன்படுத்தப்பட்ட நிறைவு செய்யப்பட்ட இறுதி ஒதுக்கீட்டுத் தொகை % ஆக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| மீண்டெழும் | 187,000 | 186,545 | 162,467 | 87% |
| மூலதனம் | 8,000 | 8,455 | 4,572 | 54% |
| மூலதனம் - (வெளிநாட்டு அன்பளிப்பு – 13) | - | 102,952 | 102,952 | 100% |

### 3.6 நி.பி. 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களத்தினது முகவராக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் இல்லை.

### 3.7 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கைப்படுத்தலின் செயலாற்றுகை

ரூபா.

| சொத்துக் குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2025 ஆம் திகதிக்கு இருப்புக் கணிப்பீட்டு அறிக்கையின் படி மீதி | 31.12.2025 ஆம் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்று அறிக்கையின் படி மீதி | முன்னாள் கணக்கீடுகளுக்கு உரியது | முன்னேற்றம் % ஆக காட்டப்பட்டு உள்ளது. |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | - | - | - | - |
| 9152 | இயந்திரங்கள் | - | 89,476,036.17 | - | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9153 | காணி | - | - | - | - |
| 9154 | தொட்டுணர முடியாத சொத்துக்கள் | - | 98,673,837.92 | - | - |
| 9155 | உயிருள்ள சொத்துக்கள | - | - | - | - |
| 9160 | நடந்து கொண்டிருக்கும் வேலைகள் | - | - | - | - |
| 9180 | வரியினைப் பெற்றுத் தருகின்ற சொத்துக்கள | - | - | - | - |

## 3.8 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை (இணைப்பு 1)

# 4 அத்தியாயம் - செயற்திறன் குறியீடு

## 4.1 நிறுவன செயலாற்றுகைக் குறியீடு (செயற்திட்டத்தின் அடிப்படையில்)

| | விசேட குறியீடு | எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|---|
| | | 100% - 90% | 75% - 89% | 50% - 74% |
| கொள்கைகளை ஒழுங்குபடுத்தல் | வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒழுங்குவிதிகளை வெளியிடல் | √ | | |
| | செயற்பாட்டு ஆலோசனைகளை வெளியிடல் | √ | | |
| | உள்ளகச் சுற்றறிக்கைகளை வெளியிடல் | √ | | |
| செயற்பாட்டு நடவடிக்கைகள் | இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் மற்றும் பற்றுக்களை வழங்குதல் | √ | | |
| நிதி முகாமைத்துவம | முற்பணத் தேவைத் திட்டம் | √ | | |
| | வருமான சேர்ப்புத் திட்டம் | √ | | |
| | உள்ளகக் கணக்காய்வு பரிசோதனை | | √ | |

| | | | | |
|---|---|---|---|---|
| **உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடு** | கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் | √ | | |
| | ஆரம்ப அறிக்கையை முன்வைத்தல் | √ | | |
| | மூன்று மாத மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தல் | √ | | |
| **கணனி முறைமையை அறிமுகப்படுத்தல** | STRATLINK கணனி மென்பொருள் அமைப்பை செயற்படுத்தல் | √ | | |
| **கொள்முதல் முகாமைத்துவம்** | பொருள், வேலை மற்றும் ஆலோசனையல்லாத சேவைகளை செயற்படுத்தல் | | | √ |
| **மனிதவள முகாமைத்துவம** | பயிற்சி நிகழ்ச்சிகளை செயற்படுத்தல் | | √ | |

## 5 அத்தியாயம்

### நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதற்கான செயலாற்றுகை

2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மாநாட்டில் உலக அரச தலைவர்களினால் உலகளாவிய ரீதியில் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ள வேண்டிய நிலையான அபிவிருத்தியின் 17 நோக்கங்கள் மற்றும் 169 இலக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டன. நிலையான அபிவிருத்திக்காக 2030 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சிநிரலில் மனிதன், பூமி மற்றும் சுபீட்சத்திற்கான செயலாற்றுகைத் திட்டம், பரந்த சுதந்திரத்திற்குள் உலகளாவிய சமாதானத்தினை வலுவூட்டுவதற்கான முயற்சி, தீவிர வறுமை, வறுமையின் வடிவங்களை நீக்குதல், மனித உரிமைகள், ஆண் பெண் சமனான தன்மை மற்றும் மகளிர், சிறுமிகள் போன்றவர்களை வலுவூட்டல் என்பவற்றை இலக்காகக் கொள்ளல் மற்றும் அனைத்து தரப்பினர்களையும் பங்குபற்றிக் கொண்டு செயற்படும் தன்மை இதில் அடங்கும்.

உலகளாவிய நிலையான அபிவிருத்திக்கான பிரவேசமாக இலங்கையின் அரச நிறுவனங்கள் அதனைத் தழுவிக் கொண்டு மற்றும் நீண்டகால அபிவிருத்திக்கான மூலோபாயத்தினை செயற்படுத்துவதற்குத் தேவையான நிலையான அபிவிருத்திச் சபையின் அனுசரணையில் நடாத்தப்பட்ட செயலமர்வுகளுக்காக எமது திணைக்களம் பங்குபற்றியது. அதன் பிரகாரம் திணைக்களத்தின் நோக்கம் மற்றும் செயற்பணி மற்றும் பணிகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு திணைக்கத்திற்கு உரிய உலகலாவிய நிலையான அபிவிருத்தியின் நோக்கம் மற்றும் இலக்குகளை மென்மேலும் விரிவாக்கி அறிந்து கொள்ள முடிந்தது.

பின்னர் திணைக்களத்தின் அபிலாசைகள் உச்சமடைவதன் படி நீண்டகால நோக்குடன் கூடிய நிலையான அபிவிருத்திக்கான நோக்கு மற்றும் அதன் முன்னேற்றத்தினை மதிப்பிடுவதற்காக ஒழுங்குபடுத்தல்கள் நிறுவப்பட்டன. ஒழுங்குபடுத்திக் கொள்ளப்பட்ட நோக்கங்களின் மூலம்

நாட்டின் நிலையான அபிவிருத்திக்கான உரிய தேவைப்பாட்டினை வழங்குவதனை முன்னிட்டு எமது திணைக்களச் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்துள்ளது. திணைக்களத்திற்கு உரிய நோக்கங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் போது அடிப்படையாகக் கொள்கின்ற நிலையான அபிவிருத்திக்கான நோக்கங்கள் கீழ்வருமாறாகும்.

## 5.1 இனங்காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகள்

### நகர மற்றும் குடியேற்றங்களை முழுமையாக, பாதுகாப்பான, உறுதிமிக்கதாக, நிலையானதாக நிர்மாணித்தல். (நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்கம் 11)

வாழ்வதற்கு உகந்த சூழலொன்றை நாட்டில் உருவாக்குவதற்கு காற்றின் தரத்தினை உறுதிப்படுத்துதல் மற்றும் நகர மற்றும் ஏனைய கழிவுகளை முகாமைப்படுத்துதல் வேண்டும். நகரமயமாக்கல் இடம்பெற்ற பிரதேசங்களில் மோட்டார் வாகனப் பயன்பாடு வேகமாக அதிகரித்ததன் காரணமாக அப் பிரதேசங்களில் காற்றில் வெளியேற்ற வாயுக்களின் வீதமும் அதிகரித்துள்ளதைக் காண முடிகின்றது. இங்கு வாகனங்களிலிருந்து வெளியேறும் நச்சுப் புகையினால் அதிகளவான காற்று மாசடைதல் இடம்பெறுவது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். அதனால் வாயு வெளியேற்றத் தரத்திற்கு இணங்காத வாகனங்களை இறக்குமதி செய்வது நிறுத்தப்பட்டுள்ளது. அதற்காக 2019.01.25 ஆம் திகதி 2107/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டுள்ளன.

### நிலையான பயன்பாடு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதிப்படுத்தல். (நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்கம் 12)

சுற்றுச் சூழலுக்கு இசைவான இரசாயனப் பொருட்கள் மற்றும் அனைத்து கழிவுகளும் முகாமைத்துவம் செய்யப்படுவதனால் மனித சுகாதார மற்றும் சூழலுக்கு ஏற்படும் தீமைகளின் தாக்கத்தைக் குறைப்பதனால் அரசு எதிர்பார்க்கின்ற அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு இத் திணைக்களம் ஒழுங்கமைப்பு நிறுவனமொன்றாக கடமை புரிகின்றது. அவ்வாறு தாக்கம் செலுத்தும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களை கண்டறிந்து அவற்றைக் கட்டுப்படுத்த மற்றும் ஒழுங்குபடுத்த இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதியை முழுமையாகத் தடை செய்தல் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு உரிய தரத்தினை நிர்ணயம் செய்தல், ஏனைய அரச நிறுவனங்களுடன் சரியான முறையில் தொடர்புகளை மேற்கொண்டு வருகின்றது.

அதன்படி, சுற்றாடல் அமைச்சினால், 2023 சனவரி மாதம் 31 ஆம் திகதிய 23/0265/622/003 ஆம் இலக்க "தனிப் பாவனைக்கான பிளாஸ்டிக் / பொலித்தீன் கழிவுகளைக் கட்டுப்படுத்தல்" என்ற தலைப்பிலான அவர்களின் அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு பெறப்பட்ட அமைச்சரவையின் அனுமதி படி, 2023 யூன் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தும் வகையில், ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் உறிஞ்சி குழாய்கள் மற்றும் கலக்கல் உபகரணங்கள், பிளாஸ்டிக்கினாலான ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தக்கூடிய தட்டுக்கள், கோப்பைகள் (யோகட் கோப்பை தவிர்ந்த), யோகட் கரண்டிகள் உள்ளிட்ட கரண்டிகள், முட்கரண்டிகள் மற்றும் கத்திகள், பிளாஸ்டிக் மலர் மாலைகள், பிளாஸ்டிக் இடியப்பத் தட்டுக்களை இறக்குமதி செய்வது 2023 ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதிய 2326/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தடை செய்யப்பட்டுள்ளது.
இதற்கு மேலதிகமாக, 2024 ஆம் ஆண்டில் 304 இயைபு முறைக் குறியீடுகளின் கீழான இறக்குமதிப் பொருட்களுக்கு தரநிலைகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை விதித்து 2024 மே மாதம் 17 ஆம் திகதிய 2384/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி

வெளியிடப்பட்டது. இதில் நேரடி மனித நுகர்விற்கு கொள்ளப்படும் உணவு வகைகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் பாகங்கள் பலவற்றுக்கு தரநிலைகள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளன.

### நிலையான அபிவிருத்திக்காக அமைதியான மற்றும் பூரணமான சமூகமொன்றினை உருவாக்கல், நீதிக்காக அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கல் மற்றும் எல்லா மட்டங்களுக்கும் வினைத்திறனான, பொறுப்புடன் கூடிய முழுமையான நிறுவனம் ஒன்றினைக் கட்டியெழுப்புதல். (நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்கம் 16)

அனைத்து நிலை அலுவலர்களினதும் பங்களிப்புடன் முடிவெடுக்கும் முறையையை நிறுவுவதும், அம் முடிவுகளை தொடர்ந்து மதிப்பீடு செய்வதனூடாக மிகுந்த வினைத்திறனை உறுதி செய்வதும் திணைக்களத்தின் இலக்காக உள்ளது. பணியாட்களின் கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற மதிப்பீட்டுக் கூட்டங்களிலினூடாக அனைத்து நிலை அலுவல்களினதும் முடிவெடுக்கும் முறையை தொடர்ச்சியாக செய்வதன் மூலம் வினைத்திறனான பொறுப்பு கூறல் மற்றும் வெளிப்படையான நிறுவனமொன்றை கட்டியெழுப்ப முடியுமானது.

தேசிய நீதி முறைமைக்கு மற்றும் சர்வதேச பிரகடனங்கள், ஒப்பந்தங்களுக்கு அமைவாக மக்களுக்கு தகவல்களை அறிவதற்கு உள்ள உரிமையை பூரணமாக உறுதிப்படுத்தும் விதமாக திணைக்களத்தில் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. திணைக்களத்திடம் கோரப்படுகின்ற தகவல்களுக்கு மிகவும் பொறுப்புக் கூறுவதோடு மிக அவசரமாக கோரிக்கையாளர்களுக்கு அளிக்கப்படுவதோடு, திணைக்களத்தின் இணையத்தளத்தின் ஊடாக புதுப்பிக்கப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

### நிலையான அபிவிருத்திக்கான உலகளாவிய ஒத்துழைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வலுப்படுத்தல் மற்றும் புத்துயிர்ப்படுத்தல் (நிலையான அபிவிருத்தி இலக்கு இலக்கம் 17

அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்படும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக, மேற்கொள்ளப்படும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல், வசதியளித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆகியன இத்திணைக்களத்தின் பொறுப்பாகும். இதன் கீழ், அரசாங்கத்தின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆகியன முறையாக நடைபெறுவதை உறுதிசெய்தல், சர்வதேச வர்த்தகம் சம்பந்தமாக நிலவும் ஒழுங்குவிதிகளை வலுவூட்டுதல் மற்றும் பலப்படுத்துதல் ஆகிய இலக்குகள் தனித்துவமானவையாகும். அங்கு, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 1540 ஆம் இலக்க சாசனத்தை மட்டுமன்றி, வர்த்தக வசதியளிப்பு ஒப்பந்தத்தையும் **(Trade Facilitation Agreement)** இலங்கைக்குள் நடைமுறைப்படுத்துவதன் மூலம், கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் ஒருமைப்பாட்டின் ஊடாக உலகளாவிய பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்துதல் ஆகிய நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் அடைந்துகொள்ளப்படுகின்றன. 1540 ஆம் இலக்க தீர்மானம் 2023 ஆம் ஆண்டில் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கு இணையாக, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு உரிமங்களை நிகழ்நிலை முறைமை ஊடாக மிகவும் பயனுள்ள முறையில் வழங்குவதற்காக, அமெரிக்க தூதரகத்துடன் இணைந்து **STRATLINK** கணினி அமைப்பை நிறுவுவதற்கும் அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. அதற்கமைய, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு **STRATLINK** கணினி அமைப்பின் செயற்பாடு தொடர்பான ஆரம்பக் கட்ட பயிற்சிகள் எஸ்தோனியா அரசாங்கத்தின் பிரதிநிதிகளினால் வழங்கப்பட்டன. இதன்படி, 2024.10.25 ஆம் திகதி **STRATLINK** கணினி அமைப்பு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு உரிமங்கள் மற்றும் பற்றுக்கள்

நிகழ்நிலை முறை ஊடாக 2025 ஆம் ஆண்டில் முழுமையாக வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

| இலக்கு/நோக்கு | இலக்கு | அடைவு மட்டங்கள் | இது வரையில் அடையப்பட்ட அடைவு மட்டங்களின் முன்னேற்றம | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-75% | 76%-100% |
| **11.** நகர மற்றும் குடியேற்றங்களை முழுமையாக, பாதுகாப்பான, உறுதி மிக்கதாக, நிலையானதாக நிர்மாணித்தல | 11.6 2030 ஆகும் போது விஷேடமாக வாயுக்களின் தன்மையினை மற்றும் நகர மற்றும் ஏனைய கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் உட்பட நகரங்கள் மூலம் ஏற்படுகின்ற தனிநபர் சுற்றுச் சூழல் தாக்கத்தினைக் குறைத்தல். | 1.தரத்திற்கு இணங்காத வாகன விடுவிப்புக்கு இடமளிக்காதிருத்தல் | | | ✓ |
| 12. நிலையான பயன்பாடு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதிப்படுத்தல். | 12.4<br>2020 ஆகும் போது இணக்கப்பாட்டிற்கு வந்துள்ள சர்வதேச வேலைத் திட்டங்களுக்கு இணங்கி சூழலை நேசிக்கக் கூடிய விதத்தில் இரசாயனப் பொருட்கள் மற்றும் அனைத்து கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் செய்தல் மற்றும் அதற்காக மானிட சுகாதார மற்றும் சூழலுக்கு நிகழ்கின்ற பாதகமான விளைவுகளை குறைப்பதற்காக காற்றிற்கு,நீரிற்கு மற்றும் மண்ணிற்கு வெளிவிடுவதனைக் குறைத்தல். | 2.<br>பாசல் மாநாட்டின் மதிப்பாய்வினை நிறைவு செய்தல் | | | ✓ |
| | | 3.<br>உரிய அதிகாரிகளின் சிபாரிசின் பிரகாரம் கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை | | | ✓ |
| | | 4.<br>ஆர்வமுள்ள தரப்பினர்களுடன் நடாத்தப்படுகின்ற ஆலோசனை கூட்டங்களின் எண்ணிக்கை | ✓ | | |
| | | 5.<br>பதவி நிலை உத்தியோகத்தர்களுடன் நடாத்தப்படுகின்ற ஆலோசனை கூட்டங்களின் எண்ணிக்கை | | ✓ | |

| இலக்கு/நோக்கு | இலக்கு | அடைவு மட்டங்கள் | இது வரையில் அடையப்பட்ட அடைவு மட்டங்களின் முன்னேற்றம | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-75% | 76%-100% |
| | | 6. விளிப்புணர்வு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் எண்ணிக்கை. | ✓ | | |
| | 12.5 2030 ஆகும் போது கழிவுப் பொருட்களின் பயன்பாட்டினை தடுத்தல்,குறைத்தல், மீள் சுழற்சி செய்தல் மற்றும் அவற்றை மீள் பயன்படுத்துவதன் மூலம் குறைத்தல். | 7. மின்னணுக் கழிவுகள் இறக்குமதியினைக் குறைப்பதற்காக வருடத்தினுள் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் எண்ணிக்கை | ✓ | | |
| | | 8.நிராகரிக்கப்பட்ட இறக்குமதிப் செய்யப்பட்ட பயன்படுத்தப்பட்ட இலத்திரனியல் பொருட்களின் எண்ணிக்கை (கையடக்கத் தொலைபேசி,கணினிகள் போன்றவை) | | | ✓ |
| **16.**நிலையான அபிவிருத்திக்காக சுமூகமான மற்றும் பூரணமான சமூகம் ஒன்றினை உருவாக்கல், நீதிக்காக அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கல் மற்றும் எல்லா மட்டங்களுக்கும் வினைதிறனான | 16.7 அனைத்து மட்டங்களிலும் பதிலளிக்கக் கூடியதும், அனைவரையும் உள்ளடக்கி,பங்குபற்றலுடன் மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தி தீர்மானங்கள் எடுக்கின்ற செயற்பாடுகளை உறுதிப்படுத்தல். | 9. நடாத்தப்பட்ட பணிக்குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை | | ✓ | |
| | | 10. நடாத்தப்பட்ட மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை | | ✓ | |
| | 16.10 தேசிய சட்ட முறைமை மற்றும் சர்வதேசக் | 11. தகவல்களை அறிந்துகொள்வதற்கான உரிமைச் | | | ✓ |

| இலக்கு/நோக்கு | இலக்கு | அடைவு மட்டங்கள் | இது வரையில் அடையப்பட்ட அடைவு மட்டங்களின் முன்னேற்றம | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-75% | 76%-100% |
| , பொறுப்புடன் கூடிய முழுமையான நிறுவனம் ஒன்றினைக் கட்டியெழுப்புதல | பிரகடனங்கள், ஒப்பந்தங்களுக்கு இணக்கமாக பொது மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காகக் காணப்படுகின்ற உரிமையினை உறுதிப்படுத்தல் மற்றும் அடிப்படைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதனை உறுதிப்படுத்தல். | சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பேரில் 14 நாட்களுக்குள் வழங்கப்பட்ட பதில்களின் எண்ணிக்கை | | | |
| | | 12.தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் திணைக்கள இணையத்தளத்தில் அவ்வப்போது வெளியிடப்பட்ட அறிக்கைகள், தொகைமதிப்பு, வெளியீடுகளின் அளவு | ✓ | | |
| **17.** நிலையான அபிவிருத்திக்காக உலகளாவிய ஒத்துழைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வலுப்படுத்தல் மற்றும் புத்துயிர்ப்படுத்தல் | 17.1.வரி மற்றும் ஏனைய வருமானங்களை சேர்த்தலை அதிகப்படுத்துவதற்காக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு சர்வதேச உதவியை வழங்குதல் உள்ளிட்ட உள்நாட்டு வள முகாமை. | ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் முன்மொழிவு (UNSCR) 1540 ஐ இலங்கையில் நடைமுறைப்படுத்தல். | | ✓ | |
| | 17.16.விசேடமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் உள்ளிட்ட அனைத்து நாடுகளினதும் நிலையான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு பல்வேறு தரப்பினரின் பங்களிப்புடன் அறிவு, அனுபவம், தொழில்நுட்பம் மற்றும் | STRATLINK கணனி அமைப்பை நிறுவுதல் | | | ✓ |

| இலக்கு/நோக்கு | இலக்கு | அடைவு மட்டங்கள் | இது வரையில் அடையப்பட்ட அடைவு மட்டங்களின் முன்னேற்றம | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-75% | 76%-100% |
| | நிதி வள மற்றும் பகிர்ந்து கொள்ளலினூடாக நிலையான அபிவிருத்திக்காக உலகளாவிய பங்களிப்பை மேம்படுத்தல். | | | | |

## 5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான வெற்றிகள் மற்றும் சவால்கள

நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு திணைக்களத்திற்குள்ள பணிகளை நிறைவேற்றும் போது வேறு அரச நிறுவனங்களுடன் தொடர்புபட்டு செயற்பட வேண்டியுள்ளது. அதன் போது, ஒரு சில பணிகள் அந் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்படுவதுடன், அப் பணிகளின் முன்னேற்றமும் திணைக்களத்தின் இலக்குகளை அடைவதில் தீர்மானமிக்க பாதிப்பை செலுத்துகின்றது. அவ் அரச நிறுவனம், அப் பணிகளை செய்வதில் காட்டும் முன்னேற்றம் எமது திணைக்களத்தின் கட்டுப்பாட்டை மீறிய விடயம் என்பதுடன், அதனை முகங்கொடுக்க வேண்டியது இன்னுமோர் சவாலாகும். திணைக்களமானது பெரும் சிரமத்துடன் இச் சவாலை வெற்றி கொள்வதற்கு செயற்படுகின்றது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட உலகளாவிய நெருக்கடிகள் மற்றும் அந்நிய செலாவணிப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்தவற்கு விதிக்கப்பட்டிருந்த இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாடுகள் படிப்படியாக தற்போது நீக்கப்பட்டுள்ளன. தேசிய பொருளாதாரம் ஓரளவுக்கு நல்ல திசைக்கு திரும்பியுள்ளதுடன், அந்நிய செலாவணி இருப்பில் ஓரளவு வளர்ச்சியைக் காண முடிகின்றது. அதனடிப்படையில் பொது மக்களின் வாழ்வை மிகவும் வசதியாக்குவதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் பல நீக்கப்பட்டன. வாகன இறக்குமதியின் போது சில பகுதிகளை விடுத்து ஏனைய இறக்குமதிகளை விடுவித்ததன் காரணமாக நுகர்வுப் போக்கில் சில தளர்த்தல்களை காணக்கூடியதாக உள்ளதுடன், கைத்தொழில் துறையில் வளர்ச்சியொன்று ஏற்படுவதற்கும் அது காரணமாகும்.

# 6. அத்தியாயம் - மனித வள சுயவிபரம்

## 6.1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம்

திணைக்களத்தின் பணிக்குழுவினர் இறக்குமதி மற்றும் ஏற்றுமதமி ஒழுங்குபடுத்தல்கள் தொடர்பான கொள்கைகளை தயாரித்தல், உரிமங்களை வழங்குதல் / பற்றுக்களை வைத்தல் மற்றும் வருமானத்தை சேர்த்தல் போன்ற பணிகளை செய்வதில் தமது முழுமையான பங்களிப்பை வழங்குவதுடன், மிகவும் வினைத்திறனான மற்றும் விளைத்திறனான

சேவையொன்றை சேவைபெறுநருக்கு வழங்குவதற்கு மிகுந்த பொறுப்புக் கூறலுடன் மற்றும் தியாகத்துடன் பணி புரிகின்றனர். திணைக்களத்தின் 2025.12.31 ஆம் திகதிக்கான ஊழியர் எண்ணிக்கை விபரம் கீழே உள்ளவாறாகும்.

| பதவி, சேவை மற்றும் தரம் | அனுமதிக்கப்பட்ட பணியாட்களின் எண்ணிக்கை | காணப்படுகின்ற பணியாட்களின் எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 14 | 12 | 02 |
| மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| இரண்டாம் நிலை | 84 | 74 | 10 |
| ஆரம்ப நிலை | 20 | 15 | 05 |
| **மொத்தம்** | **122** | **104** | **18** |

## 6.2 திணைக்களத்தின் செயலாற்றுகையினை முன்னிட்டு மனித வள பற்றாக்குறை அல்லது மேலதிகத்தின் பாதிப்பு

திணைக்களத்தில் காணப்படும் ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு, ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. மேலும் மனித வளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு கீழே உள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

I. இத்திணைக்களத்திற்காக அனுமதிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் பதவிகளான பிரதிக் கட்டுப்பாட்டாளர் / உதவிக் கட்டுப்பாட்டாளர் பதவிகள் 06 காணப்பட்ட போதிலும், தற்போது 04 பேர் மாத்திரமே கடமையில் ஈடுபட்டுள்ளனர். குறித்த வெற்றிடங்கள் நிரப்பப்படும் வரை பதில் கடமை அடிப்படையில் அல்லது அலுவலர்களை வழங்குமாறு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

II. அனுமதிக்கப்பட்டசாரதி பதவிகளின் எண்ணிக்கை 5 ஆக உள்ளதெனினும் தற்போது இருவர் மாத்திரமே கடமையில் ஈடுபட்டுள்ளனர். வெற்றிடங்களை நிரப்புமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரையில் அவை நிரப்பப்படாததால், தற்போது நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஓட்டுநர் ஒருவர் தற்காலிக அடிப்படையில் இத்திணைக்களத்தின் சேவைக்காகப் பயன்படுத்தப்பட்டு, சிரமங்களுக்கு மத்தியிலும் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ போக்குவரத்துத் தேவைகள் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

## 6.3 மனித வள அபிவிருத்தி

2025 ஆம் ஆண்டில், திணைக்களத்தின் மனித வள மேம்பாட்டுடன் நேரடியாக தொடர்புடைய பின்வரும் திட்டங்கள்/பாடநெறிகளுக்கு பணியாளர்கள் வழிநடத்தப்பட்டனர்.

| நிகழ்ச்சித் திட்டத்தின் அல்லது கற்கை நெறியின் பெயர | பயிற்சி வழங்கப்படுகின்ற பணியாட்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் கால எல்லை | மொத்த முதலீடு(Rs'000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) | முடிவு/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| வழங்கல் சங்கிலி மேலாண்மை - சிங்கப்பூர் | 01 | 2025.07.13 முதல் 2025.07.19 வரை | - | அ.டொ 175 | வெளிநாட்டு | எதிர்கால வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் தொடர்பான அண்மைக்கால அறிவு மற்றும் நடைமுறை ரீதியான அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம், திணைக்கள அதிகாரிகளின் அறிவும் புரிதலும் விரிவடைவதானது, எதிர்காலக் கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வழிகோலும். |
| சர்வதேச நாணய நிதியத்தினால் (IMF) பராமரிக்கப்பட்டு வரும் – தெற்காசிய பிராந்திய பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவி மையம் (SARTTAC) ஏற்பாடு செய்திருந்த, பின்டெக் (FINTECH) சந்தை அபிவிருத்தி தொடர்பான பயிற்சித் திட்டம் - இந்தியா. | 01 | 2025.07.13 முதல் 2025.07.19 வரை | - | அ.டொ 175 | வெளிநாட்டு | பின்டெக் (FINTECH) சந்தை அபிவிருத்தி மற்றும் அது தொடர்பான கொள்கை ரீதியான தாக்கங்கள் குறித்து அதிகாரிகளின் அறிவும் புரிதலும் விரிவடைதல் |
| இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டத்தினால் (ITEC) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தரநிலைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் உலக வர்த்தக அமைப்பின் கீழ் சுகாதார மற்றும் தாவர சுகாதார | 01 | 2025.07.15 முதல் 2025.07.26 வரை | - | அ.டொ 300 | வெளிநாட்டு | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளைத் தயாரிக்கும் போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய சர்வதேச வர்த்தக |

| நிகழ்ச்சித் திட்டத்தின் அல்லது கற்கை நெறியின் பெயர | பயிற்சி வழங் கப்படு கின்ற பணியா ட்களி ன் எண் ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்க ளின் கால எல்லை | மொத்த முதலீடு(Rs'000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) | முடிவு/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| நடவடிக்கைகள் (SPS) மற்றும் வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப தடைகள் (TBT) தொடர்பான பயிற்சிப் பாடநெறி – இந்தியா. | | | | | | மற்றும் தொழில்நுட்ப உறவுகள் மற்றும் அச்சுறுத்தல்கள் குறித்து அதிகாரிகளின் புரிதல் விரிவடைதல் |
| அரச நிதி முகாமைத்துவம் - சீனா | 02 | 2025.11.03 முதல் 2025.11.19 வரை | - | அ.டொ. 750 + பவுண் 150 | வெளிநாட்டு | அரச நிதி முகாமைத்துவம் தொடர்பான அலுவலர்களின் அறிவு விரிவடைதல் |
| புதிய அரச கொள்முதல் வழிகாட்டுதல்கள் தொடர்பான பயிற்சி | 1 | 06 மணித்தியாலம் | 14,000.00 | - | உள்நாடு | புதிய அரச கொள்முதல் நடைமுறைகளை அடையாளம் காணல் மற்றும் அது தொடர்பான பயிற்சித் திட்டங்களை மேற்கொண்டு பெற்றுக்கொண்ட அறிவு, வழிமுறைகள் மற்றும் நடைமுறைப் புரிதல்களைக் கொண்டு, திணைக்களத்தின் கொள்முதல் நடவடிக்கைகளைத் திறமையாகவும், விளைதிறனுடனும் நிறைவேற்றுவதற்கான ஆற்றல் கிடைக்கப் பெற்றமை. |

| நிகழ்ச்சித் திட்டத்தின் அல்லது கற்கை நெறியின் பெயர | பயிற்சி வழங்கப்படுகின்ற பணியாட்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் கால எல்லை | மொத்த முதலீடு(Rs'000) உள் நாட்டு | வெளி நாட்டு | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) | முடிவு/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| Advance Excel & Google Tools | 37 | 02 மணித்தியாலம் | | - | உள்நாடு | அலுவலர்களின் கணினி அறிவை மேம்படுத்தல் மற்றும் நவீன கணினி தொழில்நுட்பத்தை தினசரி உத்தியோகபூர்வ கடமைகளில் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கக்கூடிய நன்மைகள் குறித்து விழிப்புணர்வூட்டல். |
| Diploma in Diplomacy & World Affairs | 2 | வாரத்திற்கு 4 மணித்தியாலயம் வீதம் 02 வருடங்கள் | ரூ. 320,000.00 | - | உள்நாடு | சர்வதேச உறவுகள், கொள்கை பகுப்பாய்வு, பேச்சுவார்த்தை மற்றும் தகவல் தொடர்பு தொடர்பான திறன்கள் மேம்படுவதுடன், தினசரி பணிகளை மேற்கொள்ளும் போது பிரதிநிதித்துவப் பணிகளைத் திறமையாகவும், நடைமுறை ரீதியாகவும் மற்றும் விளைதிறனுடனும் நிறைவேற்றுவதற்கு அதிகாரிகளின் அறிவும் தொழில்சார் தகைமையும் உயர்ச்சி அடைதல் |
| Master OF Information Security Degree Program | 1 | 2 வருடங்கள் | ரூ. 615,000.00 | | உள்நாடு | சேவைப் பிரமாணக் குறிப்பின் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பக் கொள்கைகளை வலுப்படுத்தி, டிஜிட்டல் சேவைகளின் |

| நிகழ்ச்சித் திட்டத்தின் அல்லது கற்கை நெறியின் பெயர | பயிற்சி வழங்கப்படுகின்ற பணியாட்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் கால எல்லை | மொத்த முதலீடு(Rs'000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) | முடிவு/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| | | | | | | நம்பகத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்தல். |
| இறக்குமதி செயல்முறை குறித்த நடைமுறைப் பயிற்சியை வழங்குதல் | 23 | 03 மணித்தியாலம் | ரூ.1,800.00 | | உள்நாடு | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்கும் நடைமுறைகள் குறித்த அறிவை இக்காலத்திற்கு ஏற்ப புதுப்பித்தல் |
| ஊழல் மற்றும் இலஞ்ச ஒழிப்புத் தொடர்பான பயிற்சி - குழு I | 32 | 02 மணித்தியாலம் | - | | உள்நாடு | இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சட்டங்கள் மற்றும் பொறுப்புகள் குறித்த புரிதலை வழங்குதல், மற்றும் அரச அதிகாரிகள் லஞ்சம் மற்றும் ஊழலில் ஈடுபடுவதனை ஊக்கமிழக்கச் செய்தல்,<br><br>அத்துடன்<br><br>பணியாளர்களின் ஒழுக்கம் மற்றும் தொழில்சார் தகைமையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| நிகழ்ச்சித் திட்டத்தின் அல்லது கற்கை நெறியின் பெயர | பயிற்சி வழங்கப்படுகின்ற பணியாட்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் கால எல்லை | மொத்த முதலீடு(Rs'000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) | முடிவு/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| அரச சொத்து முகாமைத்துவம் பற்றிய பயிற்சி | 1 | 06 மணித்தியாலம் | ரூ 14,000.00 | - | உள்நாடு | அரச சொத்து முகாமைத்துவத்தின் புதிய போக்குகள் மற்றும் சட்டப் புரிதலை வழங்குதல், சொத்துக்களைப் பராமரித்தல், பாதுகாப்பை அதிகரித்தல், குறைபாடுகளைத் தவிர்த்தல், அத்துடன் அறிக்கைப்படுத்தல் மற்றும் பகுப்பாய்வுத் திறன்களை மேம்படுத்தல். |
| ஊழல் மற்றும் இலஞ்ச ஒழிப்புத் தொடர்பான பயிற்சி - குழு II | 27 | 02 மணித்தியாலம் | | - | உள்நாடு | இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சட்டங்கள் மற்றும் பொறுப்புகள் குறித்த புரிதலை வழங்குதல், மற்றும் அரச அதிகாரிகள் லஞ்சம் மற்றும் ஊழலில் ஈடுபடுவதனை ஊக்கமிழக்கச் செய்தல், அத்துடன் பணியாளர்களின் ஒழுக்கம் மற்றும் தொழில்சார் தகைமையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| நிகழ்ச்சித் திட்டத்தின் அல்லது கற்கை நெறியின் பெயர | பயிற்சி வழங்கப்படுகின்ற பணியாட்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் கால எல்லை | மொத்த முதலீடு(Rs'000) உள் நாட்டு | வெளி நாட்டு | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) | முடிவு/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| BID Evaluation விலைமனு மதிப்பீடு தொடர்பான பயிற்சி | 3 | 02 மணித்தியாலம் 30 நிமிடம் | | | உள்நாடு | முறையான சட்டக் கட்டமைப்பிற்குள், அளவீட்டு முறைகள், பகுப்பாய்வுத் திறன்கள் மற்றும் நடைமுறைச் செயல்முறைகள் குறித்த புரிதலைப் பெற்று, திணைக்களத்தின் கொள்முதல் நடவடிக்கைகளைத் திறமையாகவும் விளைதிறனுடனும் நிறைவேற்றுவதற்காக விழிப்புணர்வடைதல் |
| Stratlink அமைப்பின் செயற்பாடுகளை மீளாய்வு செய்தல் | 20 | 06 மணித்தியாலம் | ரூ 52,579.56 | | உள்நாடு | Stratlink அமைப்பின் மூலம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிமங்களை வழங்கும் போது ஏற்படும் பிரச்சினைகளை கண்டறிதல் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளை கலந்துரையாடல் |
| தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் நடைமுறைகள் தொடர்பான திட்டம். | 30 | 02 மணித்தியாலம் | ரூ. 2,800.00 | | உள்நாடு | ஔடதங்களுக்கான) இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்கும் போது, தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் நடைமுறைகள் குறித்து விழிப்புணர்வூட்டல். |
| சுகாதார மற்றும் விலங்கு உற்பத்தித் திணைக்களத்தின் நடைமுறைகள் குறித்து விழிப்புணர்வூட்டல். | 37 | 02 மணித்தியாலம் | ரூ 6,000.00 | | உள்நாடு | சுகாதார மற்றும் விலங்கு உற்பத்தித் திணைக்களத்தின் பரிந்துரைகளைப் பெற்று, இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்கும் போது அத்திணைக்களத்தின் நடைமுறைகள் |

| நிகழ்ச்சித் திட்டத்தின் அல்லது கற்கை நெறியின் பெயர | பயிற்சி வழங்கப்படுகின்ற பணியாட்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் கால எல்லை | மொத்த முதலீடு(Rs'000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) | முடிவு/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| | | | | | | குறித்து விழிப்புணர்வூட்டல் |
| அரசின் பணிகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறை | 10 | 02 மணித்தியாலம் 30 நிமிடம் | | | உள்நாடு | ஆரச பணிகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறை குறித்த புரிதலைப் பெற்றுக்கொள்ளல். |
| மூலோபாய வணிக முகாமைத்துவம் (STM) | 23 | 02 மணித்தியாலம் | | | உள்நாடு | மூலோபாய வணிக முகாமைத்துவம் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளல் |
| மீள் ஏற்றுமதி தொடர்பான நிகழ்ச்சி | 27 | 02 மணித்தியாலம் | ரூ.3,600.00 | | உள்நாடு | மீள் ஏற்றுமதி செய்தலின் போது நடைபெறும் செயற்பாடுகள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளல் |
| தீயணைப்புப் பாதுகாப்பு குறித்த பயிற்சித் திட்டம் | 2 | 04 மணித்தியாலம் | ரூ.9,440.00 | | உள்நாடு | அவசரகால நிலைமையொன்றின் போது ஏற்படும் தீயினால் உண்டாகும் ஆபத்தைத் தடுத்தல் அல்லது ஆபத்தைக் குறைத்துக் கொள்ளும் விதம் குறித்த புரிதலைப் பெற்றுக்கொள்ளல். |
| நிலையான அபிவிருத்தி இலக்குகள் | 28 | 02 மணித்தியாலம் 30 நிமிடங்கள் | ரூ.3,400.00 | | உள்நாடு | நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள், அத்துடன் அவற்றின் முக்கியத்துவம் குறித்த அடிப்படைப் புரிதலை வழங்குதல் மற்றும் நிறுவனத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு இவ் இலக்குகளைப் |

| நிகழ்ச்சித் திட்டத்தின் அல்லது கற்கை நெறியின் பெயர | பயிற்சி வழங்கப்படுகின்ற பணியாட்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் கால எல்லை | மொத்த முதலீடு(Rs'000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) | முடிவு/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| | | | | | | பயன்படுத்துவது தொடர்பான புரிதலை வழங்குதல் |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் பணிகள் | 50 | 2 மணித்தியாலம் | | | உள்நாடு | 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு அமைவாக, ஒழுங்குவிதிகளை வெளியிடுவது தொடர்பான புரிதலை வழங்குதல். |
| அலுவலக முறைமைகள் தொடர்பான பயிற்சி | 43 | 03 மணித்தியாலம் | ரூ. 12,000.00 | | உள்நாடு | அலுவலகத்தின் அன்றாடப் பணிகளைத் வினைத் திறனாகவும் விளைதிறனுடனும் நிறைவேற்றுவதற்காக, அலுவலக முறைமைகளின் முக்கியத்துவம் குறித்த புரிதலை வழங்குதல்.. |
| Stratlink அமைப்பின் செயற்பாடுகளை மீளாய்வு செய்தல் | 12 | 03 மணித்தியாலம் | | | உள்நாடு | Stratlink அமைப்பைப் பயன்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளைக் கண்டறிதல் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளை கலந்தாலோசித்தல் |
| மொன்றியல் உடன்படிக்கை சம்பந்தமான அறிவூட்டல் | 100 | 05 மணித்தியாலம் | | | உள்நாடு | மொன்றியல் உடன்படிக்கை மற்றும் கட்டுப்பாட்டுப் பொறிமுறை பற்றி அறிவூட்டல் |
| Stratlink கணனி அமைப்பினூடாக நிகழ்நிலை வழியாக வழங்கப்படும் இறக்குமதி மற்றும் | 13 | 08 மணித்தியாலம் | | | உள்நாடு | Stratlink கணனி அமைப்பினூடாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு |

| நிகழ்ச்சித் திட்டத்தின் அல்லது கற்கை நெறியின் பெயர | பயிற்சி வழங்கப்படுகின்ற பணியாட்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் கால எல்லை | மொத்த முதலீடு(Rs'000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) | முடிவு/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களுக்கு பரிந்துரை வழங்கும் நிறுவனங்களுடன் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சி | | | | | | உரிமங்களை வழங்கும் போது பரிந்துரை வழங்கும் நிறுவனங்கள் முகங்கொடுக்கும் நடைமுறைப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குதல் |

## 7 அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை

| இலக்கம் | உரித்தாக்கிக் கொள்ளப்பட்ட தேவைப்பாடுகள் | பொருந்துதல் நிலை (பொருந்தி உள்ளது/ தொடர்பற்றது) | தொடர்பற்றது எனின்,அது தொடர்பாக சிறு தெளிவுபடுத்தல் | தொடர்பற்றது எனின் எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்கான முன்மொழியப்பட்ட சரியான தீர்வுச் செயற்பாடுகள் |
|---|---|---|---|---|
| **01** | **கீழ்க் காணப்படும் நிதிக் கூற்று/கணக்குகள் உரிய திகதிகளில் முன்வைக்கப்பட்டு உள்ளது.** | | | |
| **1.1** | வருடாந்த நிதிக் கூற்று | பொருந்தி உள்ளது | | |
| **1.2** | அரச ஊழியர்களின் முற்பணக் கணக்கு | பொருந்தி உள்ளது | | |
| **1.3** | வர்த்தக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வர்த்தக முற்பணக் கணக்கு) | தொடர்பில்லை | | |
| **1.4** | களஞ்சிய முற்பணக் கணக்கு | பொருந்தவில்லை | | |
| **1.5** | விஷேட முற்பணக் கணக்கு | பொருந்தவில்லை | | |
| **1.6** | ஏனைவை | - | | |

| இலக்கம் | உரித்தாக்கிக் கொள்ளப்பட்ட தேவைப்பாடுகள் | பொருந்துதல் நிலை (பொருந்தி உள்ளது/ தொடர்பற்றது) | தொடர்பற்றது எனின்,அது தொடர்பாக சிறு தெளிவுபடுத்தல் | தொடர்பற்றது எனின் எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்கான முன்மொழியப்பட்ட சரியான தீர்வுச் செயற்பாடுகள் |
|---|---|---|---|---|
| **02** | **புத்தகங்கள் மற்றும் ஆவணப் பராமரித்தல் (445 நி.மு)** | | | |
| **2.1** | அரச நிர்வாகச் சுற்றறிக்கை 267/2018 இன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் ஆவணத்தினை புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| **2.2** | தனிநபர் ஊதிய ஆவணங்கள் / தனிநபர் ஊதிய அட்டைகள் புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| **2.3** | கணக்காய்வு விசாரணை ஆவணத்தினைப் புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| **2.4** | உள்ளகக் கணக்காய்வு விசாரணை ஆவணத்தை புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| **2.5** | அனைத்து மாதாந்த கணக்குகளின் சாராம்சத்தை (CIGAS) ஒழுங்குபடுத்தி உரிய தினத்தில் திறைசேரிக்கு சமர்ப்பித்தல். | பொருந்தி உள்ளது | | |
| **2.6** | காசோலைகள் மற்றும் காசுக் கட்டளை ஆவணங்களை புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| **2.7** | இருப்பு (inventory) ஆவணத்தினை புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
